# 27. வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942

> நான் உங்களுக்கு ஒரு சிறிய மந்திரத்தைக் கொடுக்கிறேன். அதை உங்கள் இதயத்தில் இறுத்தி மூச்சோடு வெளியிடுங்கள்! 'செய் அல்லது செத்துமடி' என்பதே அந்த மந்திரம்.
>
> - மகாத்மா காந்தி.

### புதிய போராட்டம்

ரௌலட் சத்தியாக்கிரகம் (1919), ஒத்துழையாமை இயக்கம் (1920-22), சட்ட மறுப்பு இயக்கம் (1930-34), தனிநபர் சத்தியாக்கிரகம் (1940) ஆகியவை இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் நினைவு கூறத்தக்க முக்கிய நிகழ்ச்சிகளாகும். அவை யாவும் பிரிட்டிஷ் இந்திய ஆதிக்கத்துக் கெதிராக மேற்கொள்ளப்பட்ட அகிம்சைப் போராட்டங்களாகும். தோல்வியுற்றதைப் போலத் தோன்றினாலும் அவை மக்களை இந்திய விடுதலைக்கான இறுதிப்போராட்டத்துக்குத் தயார் செய்த ஒத்திகைகளாகும். இரண்டாவது உலகப்போர் முடிந்த உடனேயே இந்தியாவுக்கு டொமினியன் தகுதியை வழங்கிவிடுவோமென்ற கிரிப்ஸ் தூதுக் குழுவின் வாக்குறுதி காலங்கடந்த அறிவிப்பாகும். அதிலும் கிரிப்ஸ் திடீரென இந்தியாவை விட்டுப் புறப்பட்டு சென்றது (1942 ஏப். 12) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தியதோடு, இந்தியத் தலைவர்களையும் நட்டாற்றில் விட்டது போலாயிற்று! மேலும் ஜப்பான் எந்த நேரத்திலும் இந்தியாவின்மீது படையெடுக்கக்கூடிய அபாயம் இருந்தது. அப்படி ஒருநிலை ஏற்பட்டால் பிரிட்டன் இந்தியாவைக் காப்பாற்றுமா என்பதற்கு எவ்வித உத்திரவாதமுமில்லை. ஆங்கிலேயர் அகன்றால் ஜப்பான் இந்தியாவைத் தாக்குவதற்கான முகாந்திரம் இருக்காதல்லவா? எனவே, காந்தியின் தலைமையில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ( Quit India Movement ) என்ற போராட்டம் துவக்கப்பட்டது.

### சூழ்நிலைகள்

வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவக்கப்பட்டதற்கான சூழ்நிலைகள் வருமாறு:

#### கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வியால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவே வெள்ளையனே வெளியேறு இயக்கம் எனக் கூறியுள்ளார் யு.என்.பியாரேலால் (U.N. Pyarellal ). கிரிப்ஸ் வந்தபோது இந்தியத் தலைவர்களிடையே ஏற்பட்ட

நம்பிக்கை அவர் சென்றபோது அவநம்பிக்கையாயிற்று. கிரிப்சால் மலையைக் கெல்லி எலியைக்கூடப் பிடிக்க முடியவில்லை! சர்ச்சில், ஏமெரி, லின்லித்கோ ஆகியோர் கிரிப்சை எலி அளவு சாதனையைக்கூட சாதிக்க விடவில்லை. கிரிப்ஸ் தூதுக்குழு அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காக அனுப்பட்டதேயன்றி இந்தியாவின் அரசியல் அமைப்புப் பிரச்னை தீர்ப்பதற்காக அனுப்பட்டதல்ல. பிரிட்டனின் அரசியல் சதுரங்க விளையாட்டால் சலித்துப்போன காங்கிரஸ் தலைவர்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கத் தீர்மானித்தனர்.

### பிரிட்டனின் பிடிவாதம்

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வியை அடுத்து பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியத் தலைவர்களுக்குத் திருப்தியளிக்கக்கூடிய தீர்வை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி எதுவும் நிகழவில்லை. மாறாக, இந்திய விவகாரச் செயலர் ஏமெரி இனி இந்தியர் பின்னால் ஓடமுடியாது! என்று கூறிய இறுமாப்புப் பேச்சு இந்தியத் தலைவர்களை ஆத்திரமடையச் செய்தது. இந்தியா ஒரு நாடாக இல்லாமையால் யாரிடம் அதிகாரத்தைக் கொடுப்பதென்று தெரியவில்லை என்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலை காங்கிரஸ் தலைவர்களின் கோபத்தைக் கிளறிவிட்டது. எனவே, பிரிட்டனின் பிடிவாதம் இந்திய விடுதலைப் போராட்டத் திரியைத் தூண்டிவிட்டது போலாயிற்று.

### இனப்பாகுபாடு

ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விளைவாக பினாங்கு, சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான இந்திய அகதிகள் குடிபெயர்ந்தனர். அதேபோன்று ஆங்கிலேயர்களும் அரக்கான் மலைகள் மற்றும் வடகிழக்குப் பகுதிக் காட்டுவழியே வந்தனர். அவர்கள் அனைவரும் தப்பிச் செல்வதற்கு இரண்டு வழிகள் மட்டுமே இருந்தன: ஆபத்துக் குறைந்த பாதுகாப்பான வழி ஆங்கிலேயர்க்கும் ஐரோப்பியர்களுக்கும் ஆபத்துமிக்க பாதுகாப்பற்ற வழி இந்திய அகதிகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன! வரும் வழியில் இந்திய அகதிகளில் பலர் விரோதிகளின் தாக்குதலுக்கும் பசி பட்டினிக்கும் வியாதிகளுக்கும் பலியாயினர்! இந்திய வீரர்கள் ஆங்கிலேயருடன் இணைந்து போரிட்ட போதிலும்கூட இனப்பாகுபாடு காட்டப்பட்டது. ஆங்கிலேய அரசு அகதிகளிடையே, இனப்பாகுபாடு காட்டியதறிந்த காங்கிரஸ் தலைவர்கள் கொதித்தெழுந்தனர்.

### ஜப்பான் படையெடுப்பு பற்றிய பயம்

பினாங்கு, சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக ஜப்பானியத் தாக்குதலுக்கு இரையாயின. அவற்றை பிரிட்டனால் காப்பாற்ற முடியவில்லை. பர்மா வரை வந்த ஜப்பானிய இராணுவம் இந்தியாவுக்குள் நுழைவதற்கான அபாயம் இருந்தது. கல்கத்தா, சென்னை, விசாகப்பட்டினம் துறைமுகங்கள் ஜப்பானிய விமானத் தாக்குதல்களுக்கு இலக்கானவையாகக் கருதப்பட்டன. சென்னை மக்களும், அதிகாரிகளும் பீதியடைந்தனர். கிழக்குக்கரையோரப் பகுதிகளிலிருந்து பல நகரங்கள், கிராமங்களிலிருந்த மக்கள் வேறு இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். பிரிட்டன் செயலற்றுப் போயிற்று. இந்தியாவை இங்கிலாந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கை இல்லாத நிலை

உருவாயிற்று. இந்த நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் இந்திய தலைவர்களுக்கேற்பட்டது. வெள்ளையனை வெளியேற்றி இந்தியாவைக் காப்பாற்றத் துணிந்தனர்.

**ஜப்பானுக்கு ஆதரவு பற்றி அச்சம்**

ஜப்பான் இந்தியாவின் கதவைத் தட்டிக்கொண்டிருந்தபோது சுபாஷ் சந்திரபோஸ் பெர்லினில் இருந்தார். பெர்லினில் இருந்து கொண்டே வானொலிமூலம் பிரிட்டனுக்கெதிராகக் கிளர்ந்தெழுமாறு இந்தியர்களைத் தூண்டினார். பிரிட்டனின் போதாத காலம் இந்தியாவுக்கு நல்ல காலம். பிரிட்டனின் சங்கடம் இந்தியாவுக்குச் சந்தர்ப்பம் என்ற போக்கில் விரோதிக்கேற்பட்ட நெருக்கடியை இந்தியாவுக்குச் சாதமாக்கிக் கொள்வதில் உறுதியாக இருந்தார் போஸ். ஜப்பானோடு ஒத்துழைக்குமாறு அவர் இந்திய மக்களைக் கேட்டுக் கொண்டார். சுபாஷ் சந்திர போஸின் வீரவார்த்தைகள் இந்தியரிடையே ஜப்பானிய ஆதரவு எண்ணத்தை உருவாக்கின. ஜப்பானிய வெற்றி கண்டு மக்கள் மகிழ்ந்தனர். காட்டுத் தீ போல் பரவியது. ஜப்பானிய ஆதரவு காங்கிரஸ் தலைவர்களிடையே கிலியை ஏற்படுத்தியது. ஜப்பானிய ஆக்ரமிப்பையும் ஆதிக்கத்தையும் விரும்பாத அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்தத் துணிந்தனர்.

**காங்கிரசின் நிலை**

ஒருபக்கம் ஜப்பானிய ஆக்கிரமிப்பு அபாயம், மறுப்பக்கம் பிரிட்டனின் இயலாமை. காங்கிரசுக்கு ஒரு தீர்க்கமான, திட்டவடிவமான முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் காங்கிரஸ் தலைவர்களால் ஒருமித்த முடிவுக்கு வரமுடியவில்லை. சிலர் ஜப்பான் இந்தியாவை பிரிட்டனின் பிடியிலிருந்து விடுப்பதை விரும்பினர். போரின் விளைவைக் கணிக்க முடியாமையால் எப்பக்கம் சாய்வதென்று தெரியாது திகைத்தனர் சிலர். பலரும் இரு ஏகாதிபத்தியங்களையும் எதிர்க்க வேண்டுமென்றனர். சுபாஷ் சந்திரபோஸ் ஜப்பான் ஆதரவாளர். ஜவஹர்லால் நேரு பிரிட்டனுடன் சமரசப் பேச்சைத் துவக்குவதை விரும்பினார். ராஜகோபாலாச்சாரி தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதை வலியுறுத்தினார். காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒத்துப்போகாமல் பிரிட்டனோடு உடன்பாட்டுக்கு வருவதென்பது காரியச்சாத்தியமற்றது என்பது அவரது முடிவு. ஆனால் அனைவரும் காந்தியின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்தனர்.

**காந்தியின் தீர்மானம்**

காந்தி ஒரு தெளிவான முடிவுக்கு வந்தார். அவருடைய கணிப்புப்படி ஜப்பான் இந்தியாவைத் தாக்கினால் பிரிட்டன் சிங்கப்பூர், மலேயா, பர்மாவில் செய்ததுபோல் எதிர்ப்பின்றி பணிந்து விடும்; அந்நிலையில் ஜப்பானிய இராணுவ ஆதிக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைவிட மோசமாக இருக்கும். பிரிட்டன் இந்தியாவைவிட்டு வெளியேறினால் ஜப்பான் இந்தியாவைத் தாக்குவதற்கான முகாந்தரம் எதுவுமிருக்காது; எனவே ஜப்பான் இந்தியாவைத் தாக்கக்கூடுவதற்கு முன்னால் பிரிட்டன் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி காந்தி 'அரிஜன்' பத்திரிக்கையில் தொடர்ந்து எழுதினார். எனவே அந்நியன் வெளியேற வேண்டும் என்பதே காந்தியின் தீர்க்கமான

தீர்மானமாகும். 'வெள்ளையனே வெளியேறு தீர்மானம்' காந்தியின் புதிய போராட்ட உத்தியைப் பரிசீலிப்பதற்காக காங்கிரஸ் செயற்குழு 1942 ஜூலை 14ஆம் தேதி வார்தாவில் கூடியது. காந்தியின் முடிவை அபுல் கலாம் ஆசாத், ஜவஹர்லால் நேரு, கோவிந்த வல்லப்பந்த், சயதுமுகமது, எம். ஆசப் அலி ஆகியோர் எதிர்த்தனர். எனினும் கூட்ட இறுதியில் அனைவரும் காந்தியின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும், இன்றேல் காந்தியின் தலைமையில் சாத்வீக மக்கள் இயக்கம் துவக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் ஒரு சில மாற்றங்களோடு பம்பாயில் ஆகஸ்டு 7-8 தேதிகளில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கீகரித்தது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய காந்தி போர் முழக்கம் செய்தார். 'நான் உங்களுக்கு ஒரு சிறிய மந்திரத்தை சொல்லிக் கொடுக்கிறேன். 'செய் அல்லது செத்துமடி' (Do or Die) என்பதே அந்த மந்திரமாகும். ஒன்று நாம் இந்தியாவை விடுவிக்க வேண்டும், அல்லது அந்த முயற்சியில் உயிர் துறக்க வேண்டும். மீண்டும் அடிமை நிலை நீடிப்பதைப் பார்ப்பதற்கு நாம் உயிர் வாழக்கூடாது'.

**மக்கள் கிளர்ச்சி**

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பம்பாயில் 1942 ஆகஸ்டு 8 இரவு 10 மணிக்கு முடிவுற்றது. மறுநாள் அதிகாலையில் காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்! ஒரு வாரத்துக்குள் நாடு முழுவதுமுள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவர்களையும் அரசாங்கம் கைது செய்துவிட்டது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் செயற்குழு மாநில காங்கிரஸ் கமிட்டிகள் அனைத்தும் சட்டவிரோதமென அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் காரியாலயங்கள் அனைத்தும் அரசாங்கத்தால் அடைக்கப்பட்டன. காங்கிரசிடமிருந்து நிதியனைத்தும் கைப்பற்றப்பட்டது. காங்கிரஸ் வெளியீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. கடைகள், ஓட்டல்கள் ஆகியவை மூடப்படுவது தடைசெய்யப்பட்டது. காங்கிரஸ் துவக்கிய இயக்கத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாதென பத்திரிக்கைகள் தடைசெய்யப்பட்டன. ஒழுங்கை நிலைநாட்ட மாநில அரசாங்கங்களுக்கு முழுஅதிகாரம் வழங்கப்பட்டது. இத்தகைய மின்னல்வேக அடக்குமுறை நடவடிக்கைகளால் அரசாங்கம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முளையிலே கிள்ளிவிடுவதென்று முடிவு செய்துவிட்டது.

காந்தியும், காங்கிரசும் அரசாங்கத்தின் இந்த அடக்குமுறையை எதிர்பார்க்கவில்லை. பம்பாய் தீர்மானத்தைப்பற்றி அரசாங்கத்துக்கு விளக்கிக்கூறி இரண்டு வாரங்களுக்குப் பின்னரே போராட்டத்தைத் துவக்குவதாக இருந்தார் காந்தி. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை வெளிநாட்டு வானொலி மூலமாகவும், ஆங்காங்குள்ள அதிகாரிகள் வழியாகவும் கேள்விப்பட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். தலைவர்களின்றி தக்க திட்டமின்றி போதிய முன்னேற்பாடு செய்யாமல் மக்கள் தன்னிச்சையாகக் கிளர்ச்சியில் ஈடுபடலாயினர். மக்கள் அவர்களுக்குத் தெரிந்த முறைகளையெல்லாம் கையாளத் தொடங்கினார்கள். காங்கிரஸ் ஊழியர்கள் பொதுக்கூட்டங்களைக் கூட்டி அரசாங்கத்தின் செயலைக் கண்டித்தார்கள். வியாபாரிகள் கடையடைப்புச் செய்தார்கள். தொழிலாளர்கள்

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாணவர்கள் கல்விக்கூடங்களைப் புறக்கணித்தனர். விவசாயிகள் வரிகொடா கிளர்ச்சியைத் துவக்கினார்கள். பல அரசாங்க ஊழியர்கள் பதவிகளைத் துறந்தார்கள். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், அர்த்தால்கள் நடத்தப்பட்டன. கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள், கஞ்சாக் கடைகள், ஜவுளிக்கடைகள், துணைப்பதிவாளர் அலுவலகங்கள், மாஜிஸ்ட்ரேட் டிவிஷனல் அலுவலகங்கள், முன்சீப் கோர்ட்டுகள், காவல் நிலையங்கள் ஆகியவை மறியல் செய்யப்பட்டன. கடலோரப் பகுதிகளில் உப்புவரிச் சட்டம் மீறப்பட்டது. நீதிமன்றங்கள் புறக்கணிக்கப்பட்டன. ஐக்கிய மாகாணம், பீஹாரில் மட்டும் முஸ்லீம்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்! அம்மாநிலங்களில் கிராமப் பஞ்சாயத்துக்கள், ஊர்வலங்கள் நடத்தி, தீவிரச்செயல்களில் இறங்கின. அஸ்ஸாமில் தேசிய அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன. பெண்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் அடக்குமுறையை ஈவிரக்கமின்றி அதிகரித்தபோது மக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர். இந்தியா முழுவதும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. கள் பானைகள், பீப்பாய்கள் உடைக்கப்பட்டன. தென்னை, பனைமரங்களை வெட்டி சாய்த்தனர். புகைவண்டிப் பாதைகள் பெயர்க்கப்பட்டன. தந்தி டெலிபோன் கம்பிகள் வெட்டப்பட்டன. பாலங்கள் பெயர்க்கப்பட்டன. குளங்களும் கம்மாய்களும் உடைக்கப்பட்டன. தபால் பெட்டிகளுக்குள் கந்தகம் போடப்பட்டது. பிரிட்டிஷ் பேரரசின் சிலைகள், வளைவுகள், நினைவுச் சின்னங்கள் போன்றவை உடைக்கப்பட்டன. கிராம அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் வேலையை விடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். போலீசார் பயன்படுத்திய வாகனங்கள் கொளுத்தப்பட்டன; போலீசார் அணிந்திருந்த உடைகள் குல்லாய்களை கழற்றிக் கொளுத்தினார்கள்! சிறைச் சாலைகளை உடைத்துக் கைதிகளை விடுவித்தனர். கஜானாக்கள் கொள்ளையிடப்பட்டன. அரசாங்க அலுவலகங்கள் தீக்கிரையாயின. ஜமீன்தார்கள், இனாம்தாரிகளின் தானியக் களஞ்சியங்கள் சூறையாடப்பட்டன. தடையுத்தரவுகள் தாராளமாக மீறப்பட்டன. ஜெயப்பிரகாஷ் நாராயணன், ராம் மனோகர் லோகியா, அஸித்பட்வர்த்தன், அருணா அசப் அலி போன்ற காங்கிரஸ் சோஷலிஸ்ட் தலைவர்கள் தலைமறைவாகி அரசாங்கத்துக்கெதிரான சதிவேலைகளில் ஈடுபட்டனர். நாளுக்கு நாள் அழிவு வேலைகளும் கொரில்லாத் தாக்குதல்களும் அதிகரித்த வண்ணமிருந்தன. புகை வண்டி நிலையங்கள் தாக்கப்பட்டன. புகைவண்டிகள் கவிழ்க்கப்பட்டன. விமான நிலைங்களும் விதிவிலக்கல்ல.

தமிழ்நாட்டிலும் வன்முறை நிகழ்ச்சிகளுக்குப் பஞ்சமில்லை. இராணுவத்தினருக்குச் சீருடைத் துணியைத் தயாரித்துக் கொடுத்த பக்கிங்காம் கர்னாடிக் மில் வேலை நிறுத்தத்தால் மூடப்பட்டது. சென்னை போர்ட் டிரஸ்டு, சென்னை மாநகராட்சி, மின்சார டிராம்கள் செயலிழந்தன. பொதுக்கட்டிடங்கள் தாக்கப்பட்டன. வடஆற்காடு மாவட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொலைபேசி தந்திக்கம்பிகளை அறுத்துவிட்டனர். ஒரு சரக்கு ரயில் வண்டியை கவிழ்த்துவிட்டனர். தென்னாற்காடு மாவட்டத்தில் மாணவர்கள் வன்முறைச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டனர். கோயமுத்தூருக்கருகே உள்ள சூலூர் விமான நிலையம் அழிக்கப்பட்டது. புகைவண்டிகள் கவிழ்க்கப்பட்டன.

34671

கள்ளுக்கடைகள் கொளுத்தப்பட்டன. தென் மாவட்டங்களில் வன்முறை விசுவரூபமெடுத்தது. ராஜபாளையம், காரைக்குடி, தேவகோட்டை, திருவாடானை, பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் மாண்டனர்.

விரைவாகப் பரவிய போராட்டத்தை அடக்க அரசாங்கம் கொடூரமான முறைகளையெல்லாம் கையாண்டது. அதிகாரிகளின் மேற்பார்வையில் கிராமங்கள் கொளுத்தப்பட்டன. கிளர்ச்சிக்காரர்களுக்குக் கசையடியிலிருந்து மரண தண்டனை வரை கொடுக்கப்பட்டது. அநியாய அபராதங்கள் விதிக்கப்பட்டு அக்கிரமமாக வசூலிக்கப்பட்டன. சந்தேகத்துக்கு உள்ளோரது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆடுமாடுகள் கைப்பற்றப்பட்டு ஏலமிடப்பட்டன. விவசாயிகளும் தொழிலாளர்களும் சித்ரவதைக் குள்ளாயினர். பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். நள்ளிரவில் போலீசார் கிராமங்களுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தோரை மிருகத்தனமாக தாக்கினர். கைகால்களைக் கட்டி, கட்டுகளில் மணல் செலுத்தித் தண்ணீர் ஊற்றி வதைத்தார்கள். தலைக்குத் தலை முடிந்து நடக்கச் செய்தனர். தொண்டர்களின் கழுத்துக்களில் செருப்புகளையும் துடைப்பக் கட்டைகளையும் மாலைகளாகப் போட்டார்கள். வாய்களில் செருப்பைக் கவ்விக்கொள்ளும்படி செய்தனர். நகக்கண்களில் ஊசிகள் ஏற்றப்பட்டன. தொப்புள்களில் பிள்ளைப்பூச்சிகளை வைத்துக் கட்டினர். கால்களில் லாடங்கள் அடிக்கப்பட்டன. தலைகள் மொட்டையடிக்கப்பட்டன. மீசை தாடிகள் கொளுத்தப்பட்டன. பெண்கள் பலவகையாலும் துன்புறுத்தப்பட்டார்கள்.

எடுத்துக்காட்டாக, ராஜபாளையத்தில் புதுப்பாளையம் சத்திரத்திலிருந்து பொன்விழா மைதானம் நோக்கிப் புறப்பட்டுச்சென்ற பிரமாண்டமான ஊர்வலத்தினர் காவல் நிலையத்தைக் கல்லெறிந்து தாக்கிப் போலீசாரிடமிருந்து ஆயுதங்களைப்பறிக்க முயன்றனர். அங்கே இருந்த ஜார்ஜ் சிலையை உடைத்தனர். நகரின் வடக்கு தெற்காகச் சென்ற தந்திக் கம்பிகள் துண்டிக்கப்பட்டன. கள்ளுக்கடைகள் கொளுத்தப்பட்டன. தபால் பெட்டிகள் உடைக்கப்பட்டன. வன்முறைக் கூட்டத்தைக் கலைக்கத் தடியடிப்பிரயோகமும், துப்பாக்கிச் சூடும் நடந்தன. பழனிச்சாமி செட்டியார் தளத்திலேயே மாண்டார். பெருமாள் குடும்பன் காலை இழந்தார். கருப்பையாத் தேவர் குண்டுக் காயம் பட்டார். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வீடுகளிலும், சாவடிகளிலும் போலீசார் புகுந்து அங்கிருந்தோரைக் கடுமையாகத் தாக்கினர். காங்கிரஸ் அபிமானிகளின் கடைகள் சூறையாடப்பட்டன. அர்த்தால் செய்த 25 பேர்மீது குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கே. குருசாமி செட்டியார், சுப்பராஜா, சஞ்சிவி ராஜா, அக்னிவேல் ராஜா முதலியார், இராமசாமி நாயுடு, ஓ.மு.திருப்பதி ராஜா, கந்தசாமி ராஜா ஆகியோர் சித்திரவதை செய்யப்பட்டனர். இளைஞர் பி.எஸ்.வசந்தனைக் கைது செய்து கைகளைக் கட்டி சந்தையில் நிறுத்தி வாயில் பூட்டை கவ்விக் கொள்ளச் செய்து இருபுறமும் போலீசார் வரிசையாக நின்றுகொண்டு அவரைஇங்குமங்குமாக உதைத்துத் தள்ளிப் பந்தாடினார்கள்! காட்டுக்குச் சென்ற விவசாயிகளும் தண்ணீர் எடுக்கச் சென்ற பெண்களும் போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டனர்.

**இயக்கத்தின் வீழ்ச்சி**

1942 ஆகஸ்டு புரட்சியால் வெள்ளையன் வெளியேறவில்லை. வெளியேற்றப்படவுமில்லை. முந்தைய போராட்டங்களைப்போலவே இப்போராட்டமும் சாத்வீகமானதாக இருக்க வேண்டுமென்றே காந்தி விரும்பினார். ஆனால் அது வன்முறைக் கிளர்ச்சியாயிற்று. இரண்டு மாதங்கள் நடைபெற்ற அக்கிளர்ச்சியை அரசாங்கம் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்கிவிட்டது. அதன் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

1. வெள்ளையனே வெளியேறு இயக்கம் தலைமையற்ற போராட்டமாயிற்று. பம்பாய்க் காங்கிரஸ் கூட்டம் முடிந்த மறுநாளே தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டனர். மக்களை வழிநடத்திய பலரும் அகிம்சைப் போராட்ட விதிகளைப்பற்றிக் கவலைப்படவில்லை. மேலும் செயல்திட்டத்தைப் பற்றி அவர்களுக்குள்ளே தெளிவில்லை. தலைமையற்ற மக்கள் தவறுகள் பல செய்தனர்;

2. போராட்டக்காரர்களுக்கு தெளிவான திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை. திட்டமில்லாத கிளர்ச்சி சுக்கான் இல்லாத படகு போலாயிற்று. நேரு கொடுத்த திட்டங்கள் ஐக்கிய மாகாணத்துக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. பெர்லினிலிருந்து சுபாஷ் சந்திர போஸ் கொடுத்த 'அகிம்சை' கொரில்லாப் போர்முறைத் திட்டம்' நடைமுறை சாத்தியமில்லை. போராட்டத் திட்டத்தை கொடுப்பதற்கு முன் காந்தி கைது செய்யப்பட்டுவிட்டார்;

3. மையக் கட்டுப்பாடு இல்லாததால் ஒவ்வொரு மாநிலமும் அதை தன்போக்கில் போராட்டத்தை நடத்தியது. அமைப்பாளருக்கிடையே ஒருங்கிணைப்பின்மையால் ஒரு பகுதியில் நடப்பது மறுபகுதிக்குத் தெரியாமல் போயிற்று. இயக்கம் வலுவிழந்தது;

4. போராட்டக்காரர்களிடையே செய்திப் போக்குவரத்து தொடர்பில்லாது போயிற்று. கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இரகசியமாகச் செய்திகளை அனுப்ப முடியவில்லை. 'தேசிய காங்கிரஸ்' வானொலி, காங்கிரசின் தீவிரவாத நடவடிக்கைகளை மட்டுமே ஒலிபரப்பிற்று. இந்து முஸ்லீம்களுக்கிடையே பதட்டநிலை, ஏற்பட்டபோது துவக்கப்பட்ட 'ஆசாத் முஸ்லீம் வானொலி' இயக்கத்தை நடத்தப் பயன்படவில்லை;

5. வெள்ளையனே வெளியேறு இயக்கம் காங்கிரஸ் இயக்கமாகவே கருதப்பட்டது. தேசிய இயக்கமாகக் கருதப்படவில்லை. அவ்வியக்கம் பிரிட்டிஷ் இந்தியா, முஸ்லீம் இந்தியா, பாகிஸ்தான் திட்டம் ஆகியவற்றுக்கெதிராகத் துவக்கப்பட்டதாகவும், பிரிட்டிஷ் ராஜிடமிருந்து இந்து ராஜ்யத்துக்கு அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென்பதே காங்கிரசின் குறிக்கோள் என்றும் கருதிய ஜின்னா முஸ்லீம்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். இந்து மகாசபை அப்போராட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. ரஷ்யா நேசநாடுகள் பக்கம் சேர்ந்தால் இந்தியக் கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தை ஆதரித்தனர். எனவே ஆகஸ்டுப் போராட்டத்துக்கு அனைத்து அமைப்புக்களின் ஆதரவும் கிடைக்கவில்லை;

# 29. அமைச்சரவை தூதுக்குழு, 1946

> 1946ல் பிரிட்டிஷ் கொள்கை, முந்தைய பிரகடனங்களைப் போலன்றி, ஐக்கிய இந்தியாவை உருவாக்க வேண்டுமென்ற விருப்பத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது.
>
> - பிபன்சந்திரா.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் அடக்கப்பட்டது. காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் சிறைக்குள்ளிருந்தனர். தேசிய அரசியல் மேடை காலியாகக் கிடந்தது! அரசாங்கத்தைக் கவிழ்க்க காங்கிரஸ் சதிசெய்ததென்றும், வன்முறை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காந்தியே காரணமென்று அரசாங்கத்தின் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது. நாட்டை ஆட்சி செய்யக் காங்கிரசுக்கு அருகதையில்லை என்ற பொருளில் இந்திய விவகாரச் செயலர் ஏமரி பேசத்தலைப்பட்டார்! மக்கள் அச்சுறுத்தி ஒடுக்கப்பட்டனர். இவற்றின் விளைவாக இந்தியாவில் அரசியல் சூனியம் நிலவியதைப் போன்றதொரு தோற்றம் ஏற்பட்டது. காந்தி மேற்கொண்ட உண்ணாவிரதமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளும் பிரிட்டனின் அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission) இந்தியாவுக்கு வந்து இந்திய அரசியல் அமைப்பு பற்றிய பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வு காண வழிவகுத்தன.

## தூதுக்குழு வருவதற்கு முந்தைய நிகழ்ச்சிகள்

### காந்திஜி உண்ணாவிரதம்

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது இந்தியாவில் வெடித்துச் சிதறிய வன்முறைக்கெல்லாம் காந்தியே காரணம் என்று குற்றம் சாட்டியது பிரிட்டிஷ் அரசு. நாட்டில் ஏற்பட்ட நாசவேலைகள் அனைத்துக்கும் காங்கிரசே பொறுப்பாகும் என்றும் அரசு பிரச்சாரம் செய்து வந்தது. அந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் மறுத்துச் சிறையிலிருந்தவாறே காந்தி வைசிராய்க்கும், பம்பாய் கவர்னருக்கும் பதிலளித்து வந்தார். காங்கிரஸ் ஆட்சிக்குழு உறுப்பினர்களுடன் பேசவும் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே தன்மீது ஆதாரமின்றி சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டை எதிர்த்தும் நீதிகேட்டும் 74 வயதான காந்தி 1943 பிப்ரவரி 10ஆம் தேதி தனது இரண்டாவது 21 நாள் உண்ணாவிரதத்தைத் துவக்கினார். உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நாட்டின் பல இடங்களிலும் கண்டன ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் கடையடைப்பும் நடைபெற்றன. வைசிராய் ஆட்சிக்குழுவிலிருந்த மூன்று இந்திய உறுப்பினர்களும் பதவி விலகினர். டில்லியில் கூடிய அனைந்திந்தியத் தலைவர்கள் மாநாடு காந்தியை உடனடியாக விடுதலை

செய்யக்கோரி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது (பிப்.19-20). ஆனால் அவ்வேண்டுகோளை வைசிராய் நிராகரித்தார். காந்தியின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாயிற்று. மருத்துவரும் நம்பிக்கை இழந்தார். காந்திஜி மரணமடைந்தால் ஏற்படக்கூடிய நிலைமையைச் சமாளிப்பதற்காக மாநில அரசுகளையும் போலீஸ் இராணுவப்படைகளையும் தயார் நிலையில் வைத்திருந்தது அரசாங்கம். உடலை எரிப்பதற்குச் சந்தனக் கட்டைகளும் சேகரித்து வைக்கப்பட்டன! ஆனால் காந்தி உண்ணாவிரதத்தை வெற்றிகரமாக முடித்தார். நாடே நிம்மதிப் பெருமூச்சுவிட்டது.

**ராஜாஜியின் திட்டம்**

ஜின்னா நடைமுறைச் சாத்தியமற்ற போக்கைப் பின்பற்றுவதாக ராஜகோபாலாச்சாரி குறைகூறி வந்தார். இந்து-முஸ்லீம் உடன்பாட்டுக்கான அடிப்படையை விவரித்து விட்டுப்பின்னர் தன்னைக் குறைகூறட்டும் என்று 1942 பிப்ரவரி மாத மத்தியில் ஜின்னா ராஜாஜியைக் கேட்டுக் கொண்டார். அதைப்பற்றி ஆலோசித்து வந்த ராஜாஜி ஆகாகான் அரண்மனையில் உண்ணாவிரதமிருந்த காந்தியை சந்தித்து காங்கிரஸ் முஸ்லீம் லீக் உடன்பாட்டுக்கான அடிப்படையை பற்றி நான்கு நாட்கள் விவாதித்தார். ராஜாஜி தனது திட்டத்தைக் காந்திக்கு எழுதிக் காட்டியதாகவும், அதைக் காந்தி ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் ராஜ்மோகன் காந்தி. இதுவே ராஜாஜி திட்டம் அல்லது சி.ஆர். சூத்திரம் (C.R. Formula) என்றழைக்கப்படுகிறது.

ராஜாஜி திட்டத்தின்படி,

1. போர்க் காலத்தில் காங்கிரஸ் இடைக்கால தேசிய அரசை அமைப்பதற்கு முஸ்லீம் லீக் ஒத்துழைக்க வேண்டும்;

2. போர் முடிந்தவுடன் இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்கில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளைப் பிரிக்கவும், அவற்றின் எல்லைகளை வரையறுக்கவும் ஒரு கமிஷன் நியமிக்கப்படும்;

3. அக்கமிஷனின் பரிந்தரைப்படி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் சம்மதத்தோடு தேசப்பிரிவினைக் கோரிக்கை பற்றி முடிவெடுக்கப்படும்;

4. பெரும்பான்மையோர் இந்தியாவிலிருந்து பிரிந்து வாழ விரும்பினால் அவ்விருப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தனிஅரசுகள் ஏற்படுத்தப்படும்;

5. அவ்வாறு பிரிக்கப்படும் பகுதிகள் எல்லையோர மாவட்டங்களில் வாழும் மக்கள் அவர்கள் விரும்பும் அரசாங்கத்தோடு சேர்ந்து கொள்ளும் உரிமையை அளிக்க வேண்டும்;

6. வாக்கெடுப்புக்கு முன் சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களுடைய நிலையை எடுத்துச் சொல்ல உரிமை உண்டு;

7. பிரிவினை ஏற்பட்டால் பாதுகாப்பு, போக்குவரத்து, வர்த்தகம் போன்றவை பற்றி அரசுகள் உடன்பாடு செய்து கொள்ளலாம்;

8. பிரிக்கப்படும் பகுதிகளிடையே உண்டாகக்கூடிய மக்கள் பரிமாற்றம் சம்பந்தப்பட்ட அரசுகளின் சம்மதத்தின்பேரில் நிகழ்வதாக இருக்க வேண்டும்;

9. பிரிட்டன் இந்தியருக்கு அதிகார மாற்றம் செய்தால் மட்டுமே மேற்கூறிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும்;

10. இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு முஸ்லீம் லீக் இந்தியாவின் பூரண விடுதலைக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம்.

காந்தியின் சம்மதத்தைப் பெற்றபின் ராஜாஜி தனது திட்டத்தைப் பதினான்கு மாதங்கள் இரகசியமாக வைத்திருந்து 1944 ஏப்ரல் மாதம் ஜின்னாவைச் சந்தித்து அவரிடம் அதுபற்றி விவாதித்தார். கேட்ட உடனேயே ஜின்னா ராஜாஜி திட்டத்தை நிராகரித்து விட்டார். பாகிஸ்தான் பிரிவினைக் கொள்கையை காந்தி ஒத்துக்கொண்டதைப்பற்றி ஜின்னா மகிழ்ச்சி தெரிவித்தார். இத்திட்டம் நாட்டைத் துண்டாடி, முஸ்லீம் லீக்கிடம் சரணாகதி அடையக்கூடியது எனக்கூறி இந்து மகாசபையினர் இத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். காங்கிரஸ் மிதவாதிகளும் சீக்கியர்களும் இத்திட்டத்தைக் குறை கூறினர். ஆங்கிலேய அதிகாரிகளும் இதைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். சி.ஆர். திட்டம் ஜின்னாவின் செல்வாக்கை அதிகரிக்க மட்டுமே உதவும் என்றார் கே.எம். முன்ஷி. அப்படித்தான்ஆயிற்று.

**மதிப்பீடு**

இராஜாஜி திட்டத்தில் சில உட்புற முரண்பாடுகள் காணப்பட்டன. அவையாவன: 1. பாகிஸ்தான் பகுதிகளை வரையறுக்கம்போது மாநிலங்களுக்குபதில் மாவட்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து; 2. முஸ்லீம்கள் அறுதிப் பெரும்பான்மையுள்ள மாவட்டங்களை மட்டுமே முடிவு செய்ய வேண்டும்; 3. பாகிஸ்தான் இந்தியாவைவிட்டுப் பிரிய வேண்டுமா என்பதை இந்துக்களும், முஸ்லீம்களும் சேர்ந்து மக்கள் ஒப்புதல் வாக்கெடுப்பு (Plebiscite) மூலம் தீர்மானிக்கப்படும்; 4. வங்காளம், அஸ்ஸாம், பஞ்சாபில் இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்கள் இந்தியா-பாகிஸ்தான் எல்லை நிர்ணயிப்பில் இடம் பெறாது; 5. இரு நாடுகளின் பாதுகாப்பு, வர்த்தகம், செய்தித் தொடர்புகளை கூட்டாட்சி அரசாங்கமே கவனித்துக் கொள்ளும். இராஜாஜியின் திட்டம் பாகிஸ்தான் பற்றிக் குறிப்பிட்டதேயன்றி, பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்துசென்று இறையாண்மை பெற்ற சுதந்திரத் தனிநாடாவதற்கு உத்திரவாதமளிக்கவில்லை. அப்படியே பாகிஸ்தான் சுதந்திரநாடாக உருவாக்கப்பட்டாலும் அது ஜின்னா குறிப்பிட்டபடி 'ஊனமுற்ற, முடமான, செல்லறித்த (Maimed, mutilated and moth-eaten) பகுதியாகவே இருக்கும்! ஜின்னா, இராஜாஜி திட்டத்தை ஏற்கமாட்டார் என்று தெரிந்தே காந்தி ஒப்புதல் அளித்தார் என்று குறிப்பிட்டுள்ளார் பி.என்.பாண்டே!

**காந்தி-ஜின்னா சந்திப்பு**

லின்லித்கோவை அடுத்து இந்திய வைசிராயாக வந்த வேவல் பிரபு (Sri Achibald Wavel, 1944-47) 1944 மே 6ஆம் தேதி காந்தியை விடுதலை செய்தார். விடுதலையான பின்னர் காந்தி ஜின்னாவுக்கு கடிதமெழுதி அவரைச் சந்திப்பதில் தனக்கிருந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார் (ஜூலை 17). ஜின்னா தனது வீட்டில் சந்திக்கும்படி காந்திக்குப் பதில் எழுதினார் (ஜூலை 24). ஜின்னா,

அடியோடு அழிந்தது என்று குறிப்பிட்டுள்ளார் பி.என்.பாண்டே. தேர்தல் மூலம் பாகிஸ்தானைப் பெற முடியாது என்ற கசப்பான உண்மையை உணர்ந்து கொண்டார்ஜின்னா. மேலும், காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் இந்தியாவின் இரண்டு பிரதான கட்சிகள் என்பதை 1945 பொதுத்தேர்தல் தெளிவு படுத்தியது.

**அமைச்சரவைத் தூதுக்குழு**

**பின்னணி**

*1945* ஆகஸ்டு *15* ஆம் தேதி ஜப்பான் சரணடைந்ததோடு இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. பின்னர் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி (Labour Party) வெற்றி பெற்று கிளெமெண்ட் அட்லி (Clament Attlee) பிரதமரானார். புதிய அரசாங்கம் 1946 துவக்கத்தில் இந்தியாவில் மத்திய மாநிலச் சட்ட மன்றங்களுக்கான பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவித்தது. இதற்கிடையே 1945 நவம்பர் மாதம் டில்லி செங்கோட்டையில் நடந்த் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத் தளபதிகளைப் பற்றிய வழக்கு (I.N.A. Trial) இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிரான சூழ்நிலையை உருவாக்கிற்று. விசாரிக்கப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டது மக்களை எழுச்சி கொள்ளச் செய்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரசின் கரங்களைப் பலப்படுத்துமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். 1945-46ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இந்துக்கள் காங்கிரசையும், முஸ்லீம்கள் லீக்கையும் ஆதரித்ததால் இந்து முஸ்லீம் வேறுபாடு வேகமாக வளரவே செய்தது. 1946 பிப்ரவரி 19 ஆம் தேதி பம்பாயில் நடந்த கடற்படை வீரர்களின் கிளர்ச்சியும் அம்பாலா, கராச்சி, சென்னை கல்கத்தா, ரங்கூன் ஆகிய இடங்களில் ஏற்பட்ட அதன் பிரதிபலிப்பும் பிரிட்டனுக்கு கவலையைக் கொடுத்தன. பிரிட்டிஷ் பாராளுமன்ற தூதுக்குழு ( British Parlimentary Delegation ) இந்தியாவுக்கு வந்து இந்திய அரசியல் நிலைமையை மதிப்பீடு செய்து சென்றது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அமைச்சரவைத் தூதுக்குழு (Cabinet Mission)வை இந்தியாவுக்கனுப்ப பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்தது.

**தூதுக்குழுவின் திட்டம், 1946 மே 16**

**நாடாளுமன்றக் குழு**

இங்கிலாந்தில் புதிதாக அட்லியின் தலைமையில் ஆட்சிக்கு வந்த தொழிற்கட்சி *(1945 ஜுலை 10)* 'காங்கிரஸ் நண்பர்களிடம்' அதிகாரத்தை ஒப்படைப்பதில் உறுதியாக இருந்தது. அந்த அடிப்படையில்தான் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது *(1945 செப்டம்பர் 19)*. *1946* ஜனவரி மாதம் பேராசிரியர் ராபர்ட் ரிச்சர்ட்ஸ் தலைமையில் *10* பேர் கொண்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு இந்தியாவுக்கு வந்து தலைவர்களுடன் கலந்து பேசிய பின்னர் இங்கிலாந்து திரும்பிச் சென்று, இந்தியர்களுக்கு உடனடியாக விடுதலை வழங்க வேண்டும் என்று ஒருமனதாகப் பரிந்துரைத்தது. அட்லி அரசாங்கம் அதே முடிவில் இருந்தால் அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission)வை அனுப்ப முடிவு செய்தது.

**அமைச்சரவை தூதுக்குழு**

இந்திய விவகாரத்துறைச் செயலர் பெதிக் லாரன்ஸ் பிரபு, வர்த்தக அமைச்சர் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், கடற்படை அமைச்சர் ஏ.வி.அலெக்சாண்டர் ஆகியோர் அடங்கிய அமைச்சரவைத் தூதுக்குழு 1946 மார்ச் 23ம் தேதி இந்தியாவுக்கு வந்தது. இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதைத் துரிதப்படுத்துவதற்கான திட்டத்தைக் கொடுப்பதே இத்தூதுக்குழுவின் நோக்கமாகும். இந்தியத் தலைவர்களுடன் விரிவாக விவாதித்த பின் பிரிவினைவாதத்தை நிராகரித்தனர். ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் பாகிஸ்தான் கோரிக்கையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி யோசித்து அவர்களது திட்டதை வெளியிட்டனர் (1946 மே 16). இந்த அரசியல் அமைப்புத் தீர்வே 'அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டம்' என்ற அழைக்கப்படுகிறது.

### அமைச்சரவை தூதுக்குழுத் திட்டம்

இத்திட்டம் 4 பகுதிகளைக் கொண்டது: 1. இந்திய யூனியன் ( Union of India ); 2. அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைத்தல் ( Compose of the Constituent Assembly ); 3. இடைக்கால அரசாங்கம் ( Interim Government ); 4 அரசியலமைப்புச் சட்ட மன்றத்துக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஒப்பந்தம் செய்தல் ( Treaty between the Constituent Assembly and Britain ).

### இந்திய யூனியன்

1. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும், மன்னர் மாநிலங்களையும் உள்ளடக்கியதே இந்திய யூனியன் ஆகும்; 2. மத்திய அரசாங்கம் வெளியுறவு விவகாரங்கள், நாட்டுப்பாதுகாப்பு, செய்தித் தொடர்பு ஆகிய மூன்று துறைகளைப் பற்றிய அதிகாரத்தை மட்டுமே கொண்டிருக்கும்; 3. மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர எஞ்சிய அதிகாரங்கள் ( Residuary Powers ) மாநிலங்களுக்கு வழங்கப்படும்; 4. இந்திய யூனியனின் ஆட்சித்துறையும், சட்டமன்றமும் பிரிட்டிஷ் இந்தியா மற்றும் மன்னர் மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும்; 5. மாநிலங்கள் 3 தொகுப்புகளாகப் பிரிக்கப்படும், முதல் தொகுப்பில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், ஒரிசா ஆகியவை இடம் பெறும். இரண்டாம் தொகுப்பு, பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து ஆகிய மாநிலங்களை உள்ளடக்கி இருக்கும்; மூன்றாவது தொகுப்பில் வங்காளமும் அஸ்ஸாமும் இடம் பெறும்; ஒவ்வொரு தொகுப்பும் அதற்குப் பொதுவான அதிகாரங்களைத் தீர்மானித்துக் கொள்ளும்; 6. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்திய யூனியன் மற்றும் மாநிலத் தொகுப்புகளின் அரசியலமைப்புச் சட்டங்களை மறுபரிசீலனை செய்து கொள்ளலாம்.

### அரசியலமைப்புச் சட்டமன்றம்

1. அரசியலமைப்புச் சட்ட மன்றம் 389 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். 2. ஒவ்வொரு மாகாணத்துக்கும் 10 இலட்சம் பேருக்கு ஒரு பிரதிநிதி என்ற மக்கள் எண்ணிக்கைக்கேற்ற விகிதாச்சார அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும். 3. ஒவ்வொரு மாகாண சட்டமன்றத்துக்கும் ஒவ்வொரு வகுப்பாரும் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர் போன்றோர் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் 4. மத்திய மாகாணத் தேர்தல்கள் முடிந்தபின் அரசியலமப்புச் சட்டமன்றம்

டெல்லியில் ஒரே அமைப்பாகக்கூடி அதன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் 5. யூனியன் அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டு நடைமுறைக்கு வந்தபின் மாகாணத் தொகுப்புகளுக்கான அரசியலமைப்புச் சட்டங்களைத் தீர்மானித்துக் கொள்ளலாம். அப்போது ஒரு மாகாணம் விரும்பினால் மற்றொரு தொகுப்புக்கு மாறிக் கொள்ளலாம். 6. அரசியலமைப்புச் சட்டமன்றம் இறையாண்மை அமைப்பு ( Sovereign body ) அல்ல. இது அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்ட வரம்புக்குட்பட்டே செயல்பட வேண்டும். இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் பிரதிநிதிகளின் பெரும்பான்மையினரின் ஒப்புதலின்றி அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவோ அல்லது வகுப்புவாதப் பிரச்னைக்குத் தீர்வு காணவோ கூடாது.

**இடைக்கால அரசாங்கம்**

புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்படும்வரை இடைக்கால அரசாங்கம் நாட்டு நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளும். யுத்த அமைச்சர் பொறுப்பு உட்பட அனைத்து அதிகாரங்களும் மக்கள் ஆதரவு பெற்ற இந்தியத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படும். இடைக்கால அரசாங்கத்தை அனைத்துப் பெரிய கட்சிகளும் ஆதரிக்க வேண்டும். இந்தியாவுக்கு அதிகாரத்தை மாற்றிக்கொடுக்கவும், இடைக்கால அரசு செவ்வனே செயல்படவும் பிரிட்டிஷ் அரசாங்கம் முழு ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

**ஒப்பந்தம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றமும் பிரிட்டனும் அதிகார பரிமாற்றம் மற்றும் இந்தியா-பிரிட்டன் தொடர்பு பற்றிய அனைத்து விவகாரங்கள் பற்றியும் சமரசப் பேச்சு நடத்துவது பற்றி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதிகாரப் பரிமாற்றத்துக்குப்பின் இந்தியாவின்மீது இருந்த பிரிட்டிஷ் மேலாதிக்கம் முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படாமையால் இந்தியா காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகிக்கொள்ளாது என்று அமைச்சரவைத் தூதுக்குழு நம்பிக்கை தெரிவித்தது.

**திட்டத்தின் நன்மை தீமைகள்**

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம், கிரிப்ஸ் தூதுக்குழுத் திட்டத்தை விடச் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. இத்திட்டத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. உதாரணமாக இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டால் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதை அப்படியே கைவிட வேண்டும் என்று கூறப்பட்டது. கூட்டாட்சியில் சேருவதும் சேராததும் மன்னர் மாநிலங்களின் விருப்பத்துக்கு விடப்பட்டது. மாநிலங்கள் தங்களுக்குள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது பற்றிய தெளிவில்லை. தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கும் பெயரில் பாகிஸ்தான் அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தைப் பற்றிய விபரங்களும் தெளிவில்லாமல் இருந்தன. மாநில அரசாங்கங்களைப் பற்றிய விதிகளும் பலதரப்பட்ட விளக்கங்களைக் கிளப்பக் கூடியவையாய் இருந்தன. இருந்தாலும் கூட அமைச்சரவை தூதுக்குழு திட்டம் முந்தைய திட்டங்களை

விடச் சாலச் சிறந்த ஒன்றாகும். பிளவுபடாத ஐக்கிய இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தைப் பரிந்துரை செய்தது இத்திட்டத்தின் தனிப்பெரும் சிறப்பாகும். இத்திட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் எல்லை வரையறுக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தின் அடிப்படை விரிவு படுத்தப்பட்டதோடு ஜனநாயகமாக்கப்பட்டது. இடைக்கால அரசை முழுவதும் இந்தியர்களே அமைக்க வழிவகுக்கப்பட்டது. அனைத்துக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளத்தக்க அறிவுப்பூர்வமான ஏற்பாட்டை இத்திட்டம் கொடுத்தது. தங்களுக்குப் பொருத்தமான அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு இந்தியர்களுக்கே கொடுக்கப்பட்டது. அப்போதைய சூழ்நிலைகளை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்ட மிகச்சிறந்த ஆவணமே இந்த அமைச்சரவை தூதுக்குழுத் திட்டம் எனப் பாராட்டினார் காந்தி. சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்து ஏக இந்தியாவுக்கு ஏற்பாடு செய்த தன்னிகரற்ற திட்டமே இதுவென்றால் மிகையாகாது. சில சந்தேகங்களை எழுப்பினாலும் கூட காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டன. காங்கிரசும் லீக்கும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே உன்னதமான நிகழ்ச்சியாகும் என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார் அபுல் கலாம் ஆசாத்.

**மதிப்பீடு**

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தை முதலில் முஸ்லீம் லீக்கும் (1946 ஜூன் 6)) பின்னர் காங்கிரசும் (ஜூன் 25) ஏற்றுக் கொண்டன. எனினும் இத்திட்டம் முரண்பாடுகளின் முடிச்சாகக் காட்சியளித்தது.. காங்கிரசையும், முஸ்லீம் லீக்கையும் திருப்திப்படுத்துவதற்காக வரையப்பட்ட இந்த திட்டம் இரு சாராரையும் திருப்திப்படுத்தவில்லை. எடுத்துக்காட்டாக, ஜின்னா, பாகிஸ்தானை இத்திட்டம் ஏற்றுக்கொண்டது என்று வாதிட்டார். மாறாக, பட்டேல் இத்திட்டம் பாகிஸ்தானை நிராகரித்தது என்று கூறினார். நேரு இந்த திட்டத்தை மாற்றும் அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உண்டு என்றார்.

சீக்கியர்கள் முதலில் இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து பின்னர் ஒத்துக் கொண்டனர். கம்யூனிஸ்டு கட்சி அரசியலமைப்புச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படுவதை எதிர்த்தது. இந்து மகாசபை மாநிலங்கள் தொகுப்பைக் கண்டித்தது. காங்கிரசும் முஸ்லீம்லீக்கும் காலத்தின் கட்டாயத்தால் வேறுவழியின்றி இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு பின்னர் செயல்பட முடியாமல் செய்தன! காங்கிரஸ் தலைவர்களுக்குள் கருத்தொற்றுமை இல்லாமையால்தான் அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத் தீர்வைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது என்பது நினைவுகூறத்தக்கது. இந்த திட்டம் ‘இணக்குவிக்க முடியாததை இணக்குவிக்க முயன்றது’ என்று கூறுகிறார் பிபன் சந்திரா. இருப்பினும் நாட்டுப் பிரிவினையை நிராகரித்து, ஒன்றுபட்ட ஐக்கிய இந்தியாவை மையப்படுத்தி வரையப்பட்ட இந்தியாவுக்கேற்ற கூட்டாட்சி அரசியலமைப்புத் திட்டத்துக்கான முன்வடிவே இந்த திட்டம் என்பதில் ஐயமில்லை.

# 30. பிரிவினையும் விடுதலையும், 1947

> இந்தியாவில் இஸ்லாம் அடியோடு அழிந்துவிடாமல் காப்பாற்றப்பட வேண்டுமானால் பாகிஸ்தானைப் பெறுவதுதான் நடைமுறை சாத்தியமான ஒரே வழியாகும்.
>
> - முகமது அலி ஜின்னா.

**அட்லியின் அறிவிப்பு**

நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் முஸ்லீம் லீக்கின் பிடிவாதப் போக்கால் செயல்பட முடியவில்லை. லீக்கின் ஒத்துழைப்பில்லாமல் இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றம் அதன் பணியைச் செய்ய இயலவில்லை. இனக்கலவரங்கள் நாட்டில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் அதிகரிக்கச் செய்தன. வைசிராய் வேவலால் அரசியல் தேக்க நிலையைப் போக்க முடியவில்லை. அந்த நேரத்தில் பிரிட்டிஷ் பிரதமர் பாராளுமன்றத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பைச் செய்தார் (1947 பிப்.20) அவ்வறிவிப்பின்படி;

1. 1948 ஜுன் முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்;

2. யாருக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்யும்;

3. வேவல்பிரபுவுக்கு பதில் மௌண்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) இந்திய வைசிராயாக நியமிக்கப்படுவார். புதிய வைசிராய் இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பார். அட்லியின் இந்த உறுதியான அறிவிப்பு இந்தியாவில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

**மௌண்ட்பேட்டன் திட்டம்**

அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து மௌண்ட்பேட்டன் பிரபு 1947 மார்ச் 22 ஆம் தேதி இந்தியாவுக்கு வந்தார். வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவர் காந்தி, ஜின்னா, நேரு, ஆசாத், படேல் மற்றும் முக்கிய தலைவர்களை சந்தித்துப் பேசினார். ஜின்னாவையே அமைச்சரவையை அமைக்கச் சொல்லலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார் காந்தி. பாகிஸ்தான் கோரிக்கையிலிருந்து சிறிதும் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை என்றார் ஜின்னா. நாட்டுப் பிரிவினை தேவையான தீமை என்பதை ஒத்துக் கொண்டார் நேரு. பிரிவினை தவிர்க்க முடியாது எனக் கருதினார் படேல். ஆனால் ஆசாத் கடைசி வரை பிரிவினைக்கு

உடன்பாடேவ இல்லை. மௌண்ட்பேட்டன் தனது சொல்வன்மையாலும், சாதுர்யத்தாலும் பண்பான தொடர்பாலும் பிரிவினைத் திட்டத்துக்குக் காந்தியின் சம்மதத்தைப் பெற்றார்.

இந்தியத் தலைவர்களோடு பேசிய பின்னர் நாட்டைப் பிரிவினை செய்யாமல் இந்திய அரசியல் தேக்க நிலையைத் தீர்க்க முடியாது என்ற தெளிவான முடிவுக்கு வந்தார் மௌண்ட்பேட்டன். அட்லியின் அறிக்கையை ஒட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டம் அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தையே (Cabinet Mission Plan) பெரிதும் தழுவியிருந்தது. அத்திட்டம் (Dickie Bird Planor Balkan Plan) பிரிட்டிஷ் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அமைச்சரவை அதில் சில மாற்றங்களைச் செய்து திருப்பி அனுப்பியது. திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தை அப்போது சிம்லாவில் தன்னுடன் தங்கியிருந்த நேருவிடம் காட்டினார் மௌண்ட்பேட்டன் (மே 10). அத்திட்டத்தைப் பார்த்த நேரு சீற்றம் கொண்டார்; அதை அங்கேயே நிராகரித்தார். அதன்பின்னர் வைசிராய் தன்னுடன் சீர்திருத்தக் கமிஷனராய் (Reforms Commissioner) இருந்த வி.பி.மேனனின் துணையுடன் தனது திட்டத்தைத் தயாரித்தார். அதுவே மௌண்ட்பேட்டன் திட்டம் (Mountbatten Plan) என்றழைக்கப்படுகிறது. அத்திட்டத்துக்கு இந்தியத் தலைவர்களின் ஆதரவைப் பெற்ற பின்னர் மௌண்ட்பேட்டன் இலண்டன் சென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுத் திரும்பினார் (1947 மே 30). புதிய திட்டத்தை வானொலி மூலம் அறிவித்தார் மௌண்ட்பேட்டன் (ஜூன் 3). உடனிருந்த நேரு, ஜின்னா, பலதேவ்சிங் ஆகியோர் இந்தியாவை இரண்டு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கும் அத்திட்டத்தை ஆதரித்துப் பேசினார்.

மௌண்ட்பேட்டன் திட்டம் நாட்டுப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது. அத்திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன;

1. இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றத்தின் வேலை இடையூறின்றி நடைபெறும்;

2. புதிதாக எழுதப்படும் அரசியல் சட்டம் அதை ஏற்றுக்கொள்ளாத பகுதிகளுக்குப் பொருந்தாது;

3. நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பு சட்டமன்றத்தை ஏற்றுக்கொள்ளாத பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தனிமன்றத்தின்மூலம் அப்பகுதிகளின் விருப்பம் அறியப்படும்;

4. பஞ்சாப், வங்காள சட்ட மன்றங்கள் பெரும்பான்மை முஸ்லீம்களைக் கொண்ட மாவட்டங்களின் பிரதிநிதிகளுக்கும், பிறருக்குமென இரு பகுதிகளாய்ப் பிரிக்கப்படும்;

5. சிந்து சட்டமன்றம் யார் பக்கம் இருக்க வேண்டுமென்பதை அதுவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்;

6. வடமேற்கு எல்லை மாகாணத்தில் இப்பிரச்சனை மக்கள் வாக்கெடுப்பின்மூலம் தீர்மானிக்கப்படும்;

7. பலுசிஸ்தான் மக்களுடைய கருத்தை அறிவதற்கான முறையை வைஸ்ராய் முடிவு செய்வார்;

8. பஞ்சாப் , வங்காளம், சில்ஹெட் ஆகிய பகுதிகளில் தேர்தல்கள் நடத்தி அரசியல் அமைப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்;

9. மன்னர் மாநிலங்களைப் பொறுத்த வரை அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத்தில் (1946 மே 12) கண்டுள்ள விதிகள் பின்பற்றப்படும்;

10. இந்தியாவை இரண்டாகப் பிரிவினை செய்வதால் ஏற்படக்கூடிய நிர்வாக விளைவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்துத் தீர்த்தக் கொள்ளலாம். பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகார மாற்றத்தை அறிவிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாகவே செய்யலாம்.

**முடிந்த முடிவு**

இந்தியாவைக் கூறுபோடும் மௌன்ட் பேட்டன் திட்டம் 1947 ஜூன் 3 ஆம் தேதி வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. நேரு ஜின்னா, பலதேவ்சிங் ஆகியோர் அப்போதே அப்பிரிவினைத் திட்டத்துக்கு ஒப்புதல் தந்துவிட்டனர். நாடு துண்டாடப்படுவதைக் கொஞ்சமும் விரும்பாத காந்தியை மௌன்ட் பேட்டன் தன்வழிக்குக் கொண்டு வந்து விட்டார். பிரிவினைத் திட்டம் அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்தில் முஸ்லீம் லீக் முறைப்படி அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது (ஜூன் 9.) அதன்பின் காங்கிரஸ் செயற்குழு தன் சம்மதத்தைத் தெரிவித்தது (ஜூன் 12). டெல்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயற்குழுவின் முடிவை அங்கீரித்தது (ஜூன் 14-15) சீக்கியர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பிரிவினையை ஏற்றுக் கொண்டனர். ஆனால் காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் தேசம் துண்டாடப்படுவதைக் கடுமையாக எதிர்த்தனர். பிரிவினையை காங்கிரஸ் ஒத்துக் கொண்டது நம்பிக்கை இழந்துவிட்டதற்கான வக்காலத்து, பலவீனத்தின் வெளிப்பாடு என்ற புருசோத்தம் தாஸ் தாண்டன் குற்றம் சாட்டினார். ஆசாதும் பிற தேசிய முஸ்லீம்களும் துவக்கத்திலிருந்தே பிரிவினை திட்டத்தை எதிர்த்தனர். இறுதிவரை அவர்கள் நிலை திரியாது இருந்தனர். இந்துமகா சபையினர் இந்திய ஒற்றுமைக்கு உலைவைக்கும் பிரிவினைத் திட்டத்தை நஞ்சென வெறுத்தனர். எனினும் பலமிக்க கட்சிகள் பிரிவினையை ஏற்றுக்கொண்டதால் பாகிஸ்தான் பிரிவது முடிந்த முடிவாகிவிட்டது.

# 17. ரௌலட் சத்தியாக்கிரகம், 1919

> மக்களால் வெறுக்கப்பட்ட இச்சட்டத்தை எதிர்த்து நடத்தப்பட்ட தன்னியல்பான தேசிய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அதிகாரிகள் அதிர்ந்து விட்டனர். இதுதான் கிளர்ச்சி.
>
> - ஜே.பி. கிருபளானி.

### காந்தியின் பிரவேசம்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பிரவேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவரது வருகை இந்திய தேசிய இயக்கத்தின் போக்கையே மாற்றி அமைத்தது. தனது தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிய காந்தி பம்பாய் *(1915)*, லக்னோ *(1916)*, காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொண்டார். பின்னர் சம்பரான் *(1917)*, கெட்டா *(1917 நவ.)* அகமதாபாத் *(1918 பிப்.)* குட்டிச் சத்தியாகிரகங்கள் அவுரிச் சாகுபடியாளர்கள், விவசாயிகள், மில் தொழிலாளர்கள் ஆகியோருக்காக நடத்தப்பட்டவையாகும். வாய்மை, அகிம்சை, மார்க்கம் முடிவு, தூய்மை ஆகிய அறநெறிகளின்படி மேற்கொள்ளப்படுவதே சத்தியாகிரகம் ஆகும். தென்னாப்பிரிக்காவில் காந்தி பெற்ற பயிற்சியை, படிப்பினையை இந்தியச் சூழலுக்கேற்பக் குறிப்பிட்ட இடங்களில் சோதனை செய்து பார்த்த பின்னர் தேசஅளவில் பயன்படுத்தத் துணிந்தார். நான்காண்டு கால சத்தியாக்கிரகப் பரிசோதனைக்குப் பின்னர் காந்தி அகில இந்தியத் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார். அந்த அங்கீகாரத்துக்கான வாய்ப்பை ரௌலட் சட்டம் அவருக்களித்தது.

### ரௌலட் சட்டம்

முதல் உலகப்போர் முடிந்தவுடனேயே இந்தியத் தீவிரவாதிகளையும், பயங்கரப் புரட்சிக்காரர்களையும் அடக்கும் நோக்கத்துடன் முடியவிருந்த இந்தியப் பாதுகாப்புச் சட்ட ( Defence of India Act ) த்துக்கு பதில் புதிய சட்டத்தை கொண்டுவர இந்திய அரசு முயன்றது. சிட்னி ரௌலட் (Sydney Rawltt) என்ற ஆங்கிலேய நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்தியாவில் அரசவிரோத நடவடிக்கைகள்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்குழு சமர்பித்த அறிக்கை *(1918 ஏப்.15)* யில் கூறப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் இரு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன. அவை ரௌலட் மசோதாக்கள் (Rowlatt) என்றழைக்கப்பட்டன. அம்மசோதாக்களின்படி,

1. அரசாங்கம் சோதனை ஆணை (Warrant) ஏதுவுமின்றி எவரையும் கைது செய்யலாம்;

2. 'அபாயகரமான ஆட்கள்' என்ற காரணத்தைக்கூறி எவ்வித விசாரணையுமின்றிக் காலவரையின்றி காவலில் வைக்கலாம்;

3. அரச விரோதக் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என கருதப்படுவோரைக் குறிப்பிட்ட இடங்களில் காவலில் இருக்குமாறு கட்டாயப் படுத்தப்படலாம்;

4. நடுவர்களின் (Juries) துணையின்றியே மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் அரசத் துரோக வழக்குகளை விசாரிக்கலாம்; அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது.

இந்தக் 'கருப்பு மசோதாக்களை' ( Black Bills) இந்தியத் தலைவர்கள் கடுமையாகக் கண்டித்தனர். அம்மசோதாக்கள் மத்தியச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்களான எஸ்.என்.பானர்ஜி, வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி, டெஜ் பகதூர் சாப்ரு, வி.ஜே.பட்டேல், ராமசுவாமி அய்யங்கார் ஆகியோர் ரௌலட் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் வேண்டாத விளைவுகள் ஏற்படும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார்கள். பல ஊர்களில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்த மசோதாக்களுக்கெதிராகப் பலரும் சீற்றங் கொண்டனர். புதிதாக உருவான அச்சீற்றம் புதிய தலைவரைத் தந்தது என்கிறார் பெர்சிவெல் ஸ்பியர் (Percival Spear) என்ற வரலாற்று அறிஞர். அப்புதிய தலைவரான காந்தி ரௌலட் மசோதாக்கள் விலக்கிக் கொள்ளப்படாவிடில் சத்தியாக்கிரகத்தைத் துவக்குவதைத் தவிர தனக்கு வேறு வழியில்லையென்று அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். அந்த எச்சரிக்கையையும் மீறி அரசாங்கம் குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தை (Anarchical and Revolutionary Crime Act) நிறைவேற்றியது. அதுவே ரௌலட் சட்டம் என்று பெயர் பெற்றது.

**சாத்வீகப் போராட்டம்**

மனித உரிமைக்கும் நீதிக்கும் உலைவைக்கும் சட்டம் ரௌலட் சட்டம் எனக்கருதினார் காந்தி. அச்சட்டம் சவுக்கைக் கொண்டு அரசாங்கத்துக்கு ஆகாத எவரையும் எப்படியும் அடிக்கலாம் என்பதை நன்குணர்ந்த காந்தி அந்தச் சாத்தான் சட்ட ( Satanic Act ) த்தை முழுமூச்சுடன் எதிர்க்கத் தீர்மானித்தார். சத்தியாக்கிரக சபை ( Satyagraha Sabha ) 1919 மார்ச் மாதம் பம்பாயில் தோற்றுவிக்கப்பட்டது. சத்தியாக்கிரகச் சபதம் ( Satyagraha Pledge ) எடுத்துக் கொள்ளப்பட்டது. சத்தியாக்கிரகச் சபையின் கிளைகள் நாட்டின் பல பகுதிகளிலும் துவக்கப்பட்டன. 1919 மார்ச் 30ஆம் தேதியை சத்தியாக்கிரக நாளாக ( Satyagraha Day ) நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று காந்தி மக்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் சென்னை சென்றபோது (மார்ச் 17) சி. ராசகோபாலாச்சாரியார், எஸ். கஸ்தூரிரங்க அய்யங்கார், சி.விஜயராகவாச்சாரியார் ஆகியோரது ஆலோசனையின்படி சத்தியாக்கிரக நாளை ஏப்ரல் 6க்குத் தள்ளிவைத்து விட்டார் காந்தி!

சத்தியாக்கிரக தினம் தள்ளி வைக்கப்பட்ட செய்தி அறியாத டில்லி மக்கள் 1919 மார்ச் 30 அன்று பூரண ஹர்த்தால் அனுசரித்தனர். டெல்லி பொதுவாழ்க்கை அன்று நின்று போயிற்று. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட மோதலின் பலர் இறந்தனர். பலர் காயமுற்றனர். 1919 ஏப்ரல் 6ஆம் தேதி காந்தியின் குரலுக்குச் செவிசாய்த்து நாடு அமைதியாக அகிம்சை வழிநின்று சத்தியாகிரக நாளைப் பக்தி சிரத்தையோடு கொண்டாடியது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் கடையடைப்பு, உண்ணாவிரதம் பொதுக்கூட்டங்கள், பிரார்த்தனைகள் ஆகிய அனைத்தும் எவ்வித அசம்பாவிதமுமின்றி நடைபெற்றன.

ஆனால் அரசாங்கத்தின் விவேகமற்ற போக்கால் வன்முறை வெடித்தது. சுவாமி சிரத்தானந்தரின் அவசர அழைப்பின்பேரில் காந்தி டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றார் (1919 ஏப்ரல் 7). அவர் மதுரா ( Mathura ) வை அடைந்தபோது மேற்கொண்டு செல்லக்கூடாதெனத் தடுக்கப்பட்டார். தடையை மீறிப் பயணம் செய்த காந்தியைப் பஞ்சாபின் எல்லையிலிருந்த பால்வால் (Palwal ) என்ற சிற்றூரின் புகை வண்டி நிலையத்தில் கைதுசெய்து பம்பாய்க்குக் கொண்டு சென்றுவிட்டனர். அகமதாபாத், பம்பாய், டில்லி, அமிர்தசரஸ் ஆகிய இடங்கள் வன்முறைக் கேந்திரங்களாயின. ஆங்கிலேயர்களும் அரசாங்க அதிகாரிகளும் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. போலீஸ் உத்தரவுகளும் தடைகளும் மீறப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அகிம்சை ஆயுதத்தைச் சரியாகப் பயன்படுத்தக்கூடிய பயிற்சியையும் பக்குவத்தையும் மக்கள் இன்னும் சரியாகப் பெறவில்லை என்பதை அறிந்தார் காந்தி. இமாலயத் தவறு (Himalayan Miscalculation) செய்துவிட்டதாகக் கருதினார் காந்தி. ரௌலட் சத்தியாக்கிரகத்தை துவக்கியவர் காந்தி, காங்கிரஸ் அல்ல, அவரே நிறுத்தினார்.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை**

காந்தி ரௌலட் சத்தியாக்கிரகத்தை நிறுத்தினார். ஆனால் அரசாங்கம் தன் அடக்குமுறையை நிறுத்தவில்லை. டாக்டர் சைபுதீன் கிட்சுலு ( Dr. Saifudin Kitchlew )வும், டாக்டர் சத்யபாலும் ( Dr. Satyapal ) அமிர்தசரசின் மக்கள் செல்வாக்குமிக்க காங்கிரஸ் தலைவர்கள். முன்னவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற முஸ்லீம் வழக்கறிஞர், பின்னவர் இந்து மருத்துவர். இவ்விருவரையும் துணைக்கமிஷனர் தனது பங்களாவுக்கு வரச்சொல்லி கைது செய்து தரம்சாலா என்ற மலைநகருக்குக் கொண்டு சென்றுவிட்டார்! பஞ்சாபின் லெப்டினண்ட் கர்னலாயிருந்த மைக்கேல் ஒட்வியர் ( Michael O'Dwyer ) அவ்விருவரையும் நாடுகடத்த உத்தரவிட்டார்! முன்னரேயே ரௌலட் சட்டத்தாலும், காந்தி கைது செய்யப்பட்டதாலும் சினங்கொண்டிருந்த பஞ்சாபியர் தங்களது அபிமானத் தலைவர்கள் இருக்குமிடம்கூடத் தெரியாது மறைத்து வைக்கப்பட்டதால் சீற்றம் கொண்டனர். சீறி எழுந்தனர். துணைக்கமிஷனர் பங்களாவை நோக்கிப் புறப்பட்டனர். அவர்களை ஒரு புகைவண்டிப் பாலத்தருகே தடுத்து நிறுத்தப்பட்டபோது வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. இருபத்தைந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பதிலுக்கு ராபின்சன் என்ற சரக்குகிடங்கு காவலர் அடித்துக் கொல்லப்பட்டார். பின்சான்

கம்பிகளும் தந்திக் கம்பிகளும் அறுத்தெறியப்பட்டன. புகைவண்டிப் பாலம் பெயர்க்கப்பட்டது. வங்கிகளும், வங்கி அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். செல்வி மெர்செல்ரா ஷெர்வுட் என்ற சமயப் பரப்பு ஊழியர் மோசமாகத் தாக்கப்பட்டார். பல பொதுக் கட்டிடங்கள் கொளுத்தப்பட்டன, அல்லது தரைமட்டமாக்கப்பட்டன. அமிர்தசரஸ் வன்முறை ஆர்ப்பாட்ட மையமாயிற்று.

அரசாங்க அடக்குமுறைக்குப் பலியானோருக்கு இரங்கல் கூட்டம் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1919 ஏப்ரல் 13 அன்று ஜாலியன்வாலா பாக் ( Jallian wallah Bagh )இல் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அன்றுதான் சீக்கியர்களுக்குப் புனிதமான பைசாகி தினம் ( Baisaki Day ). தங்கள் கோவிலில் வழிபடப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்திருந்தார்கள். ‘பாக்’ என்றால் தோட்டம் என்று பொருள். அங்கு தோட்டம் எதுவும் இல்லை. ஜாலியன் வாலாபாக் என்பது நெடிய சுவர்களால் சூழப்பட்டு, ஒரே குறுகிய நுழைவாயிலையுடைய நீண்ட சதுர மைதானம். அதில் சுமார் 20,000 பேர் கூடி இருந்தனர். அறிவித்தபடி இரங்கல் கூட்டம் சரியாக மாலை 4.30 மணிக்குத் துவங்கிற்று. அங்கு கூடியிருந்தோருக்குப் பிரிகேடியர் ஜெனரல் ரெஜினால்டு டயர் ( Reginald Dyer ) அன்று காலை பிறப்பித்த கூட்டம் தடை உத்தரவு பற்றி எதுவும் தெரியாது. தனது ஆணையை மீறி கூடிவிட்டனரே என்று கோபமுற்ற டயர் படைவீரர்களுடன் ஜாலியன் வாலாபாக் சென்று முன்னறிவிப்பு ஏதுமின்றி, தோட்டாக்கள் தீரும் வரைக் கூட்டத்தினரைப் பார்த்துச் சுடுமாறு உத்தரவிட்டார். அவ்வாறே பத்து நிமிடங்கள் நிறுத்தாமல் சுட்டனர். 1650 சுற்றுச் சுட்டதால் 1500 அப்பாவி மக்கள் மாண்டனர். கவனிக்கப்படாமையால் காயம்பட்ட மேலும் பலரும் மடிந்தனர். இரங்கல் கூட்டத்துக்குச் சென்றோர் இறந்துபட்ட கோரக்காட்சி அது.

**இராணுவச் சட்ட நடவடிக்கைகள்**

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல ஜாலியன்வாலாபாக் படுகொலை போதாதென்று, அமிர்தசரசிலும், லாகூரிலும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது (ஏப்ரல் 15). அமிர்தசரசில் மக்கள் ஆங்கிலேய அதிகாரிகளைப் பார்க்கும் போதெல்லாம், கைதூக்கி வணக்கம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். மறுப்போர் கசையடிக்கு உள்ளாயினர். புகை வண்டியில் பயணம் செய்ய மக்கள் அனுமதிக்கப்படவில்லை. மாணவர்கள் யூனியன் ஜாக் கொடிக்கு வணக்கம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர். இந்துக்களும் முஸ்லீம்களுடன் ஜோடியாகச் சேர்ந்து விலங்கிடப்பட்டனர். டயரின் ஊர்ந்து செல்லும் உத்தரவு ( Crawling Order ) கொடுமையின் சிகரமாக இருந்தது. செல்வி ஷெர்வுட் தாக்கப்பட்ட வீதியில் செல்வோர் அனைவரும் தரையில் படுத்து மார்பால் ஊர்ந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டனர். அவ்வீதியில் சவுக்கடிச் சதுக்கம் ( Wipping Square ) ஒன்று கட்டப்பட்டு அதில் குற்றவாளிகள் நிறுத்தி வைக்கப்பட்டுக் கசையடி கொடுக்கப்பட்டார்கள். செல்வி ஷெர்வுட்டைத் தாக்கியதாகச் சந்தேகப்பட்ட ஆறு இளைஞர்கள் அச்சதுக்கத்துக்கு கொண்டுவரப்பட்டு ஆளுக்கு 30 கசையடிகள் கொடுக்கப்பட்டன. லாகூர், கசூர், குஜ்ரன்வாலா, ஷேகுபூரா ஆகிய இடங்களிலும் இராணுவச் சட்ட நடவடிக்கைகள் அரக்கத்தனமாக அமல் செய்யப்பட்டன. எடுத்துக்காட்டாக,

லாகூரில் இராணுவச் சட்டம் பற்றிய சுவரொட்டிகளை வீட்டுச் சுவர்களில் ஒட்டுவதோடு மட்டுமன்றி அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பையும் வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் ஏற்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்! கசூரில் மக்கள் குனிந்து நெற்றியால் தரையைத் தொடுமாறு தண்டிக்கப்பட்டனர்! குஜ்ரன் வாலாவில் பள்ளிகள் ஆகாய விமானத்திலிருந்து தாக்கப்பட்டன! சுருங்கக்கூறின் இராணுவச் சட்டத்தின் துணைகொண்டு பஞ்சாப் மக்கள் மாக்களாக நடத்தப்பட்டனர்.

## ஹண்டர் விசாரணைக்குழு

பஞ்சாப் படுகொலை நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியது. கண்டனக் குரல்கள் கிளம்பின. பஞ்சாபில் நடைபெற்ற பயங்கரத்தைப் பற்றிய முழுவிபரங்கள் தெரியவில்லை. மாளவியா போன்றோர் மத்தியச் சட்டமன்றத்தில் இதுபற்றிய கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். படுகொலை நடைபெற்ற இடத்தைப் பார்வையிடுவதற்கு காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பஞ்சாப் படுகொலைபற்றி உடனடியாக விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரியது. அதுமட்டுமல்ல, மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ், பஸ்லுல் ஹக், அப்பாஸ் தியாப்ஜி, காந்தி, கே.சந்தானம் ஆகியோர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவையும் நியமித்தது. அந்த காங்கிரஸ் விசாரணைக் குழு பஞ்சாப் படுகொலை பற்றிய பல திடுக்கிடக்கூடிய தகவல்களைத் தந்தது. அதோடு ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்; வைசிராய் மைக்கேல் ஓட்வியர், தளபதி டயர் போன்றோர் பதவி விலக வேண்டும்; சம்பந்தப்பட்ட தள அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும் போன்ற யோசனைகளையும் அக்குழு தெரிவித்தது.

எதிர்ப்பு உருவாவதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு ஒழுங்கின்மை விசாரணைக் குழுவை ( Disorders Enquiry Committee ) நியமித்தது. நீதிபதி ஹண்டர் பிரபு ( Lord Hunter ) அதன் தலைவர். இராணுவச் சட்டத்தின்கீழ் பஞ்சாப் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்பற்றி விசாரிப்பதே அக்குழுவின் நோக்கம். *1919* நவம்பர் மாதம் பஞ்சாபுக்கு வந்த அவ்விசாரணைக்குழு, லாகூரில் விசாரணையைத்துவக்கி *1920* மே மாத இறுதியில் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. குழுவிலிருந்த ஆங்கிலேயர்களுக்கும், இந்தியர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தமையால் அறிக்கை பெரும்பான்மையினர் அறிக்கை ( Majority Report) சிறுபான்மையினர் அறிக்கை ( Minority Report ) என்று இரு பகுதிகளாக எழுதப்பட்டது.

பெரும்பான்மையினர் அறிக்கை எச்சரிக்கையின்றி சுட்டதற்காகவும், தோட்டாக்கள் தீருமட்டும் சுட்டதற்காகவும், தளபதி ரெஜினால்டு டயரைக் கண்டித்தது. டயரின் சமயோசிதச் செயல் பஞ்சாபைக் காப்பாற்றியது, மற்றொரு *1857* கிளர்ச்சியைப் போன்ற கொந்தளிப்பு ஏற்படாதவாறு தடுத்தது என்ற வாதத்தை நிராகரித்தது. அதேபோன்று மற்றப் பகுதிகளுக்கும் பாடமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பஞ்சாப் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்தையும் அந்த அறிக்கை ஏற்க மறுத்தது. சிறுபான்மையினர் அறிக்கை பஞ்சாப் படுகொலையை *1914*ல் பிரான்சிலும், பெல்ஜியத்திலும் நடைபெற்ற கொடுமைகளோடு ஒப்பிட்டுக் காட்டியது. ஜாலியன்வாலா பாக்குக்கு வெளியே

நிறுத்தப்பட்டிருந்த இரு இராணுவ வாகனங்களும் உள்ளே கொண்டு வரப்பட்டிருந்தால் தானியங்கித் துப்பாக்கிகளும் உபயோகப்பட்டிருக்கும் எனக் கூறியமைக்காகவும், காயமுற்றோரைக் கவனியாதுவிட்டமைக்காகவும் தளபதி டயரை இரக்கமற்ற அரக்கன் என்று அந்த அறிக்கை வர்ணித்தது. இரு அறிக்கைகளுமே முகாந்திரமின்றிச் சுட்டதையும், இராணுவச் சட்டநடவடிக்கைகளையும், பிற தண்டனைகளையும் கண்டித்தன. ஹண்டர் அறிக்கை எட்வின் மாண்டேகுவின் பஞ்சாப் நிகழ்ச்சியைப் பற்றிய நீண்ட குறிப்பையும் கொண்டிருந்தது. அக்குறிப்பில் ஊர்ந்துசெல்லும் உத்தரவு நாகரிக அரசாங்கத்தின் நெறிமுறையை மீறிய செயல் என்று இந்திய விவகாரச் செயலர் குறிப்பிட்டிருந்தார்.

ஹண்டர் விசாரணைக்குழு அறிக்கையைப் பரிசீலித்த இந்திய அரசாங்கம் பஞ்சாபில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதியது. குறிப்பாக பஞ்சாபில் சிவில் நிர்வாகம் கைவிடப்பட்டது சரியல்ல என்றும், டயர் ஏப்ரல் 13 அன்று பிறப்பித்த பொதுக்கூட்டத் தடை உத்தரவை மக்கள் நன்கு அறியச் செய்திருக்க வேண்டுமென்றும், சுடுவதற்கு முன்னர் மக்களை எச்சரித்திருக்க வேண்டுமென்றும் அரசாங்கம் நினைத்தது. அதே சமயம் நல்ல நோக்கத்தோடுதான் டயர் செயல்பட்டார் என்ற கருத்தையும் தெரிவித்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் அவை பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் பாதுகாத்தமைக்காக டயரைப் பாராட்டியது! இந்திய விவகாரச் செயலரின் கண்டனத்துக்காளான தளபதி டயர் பதவி விலகினார் (1920 மார்ச் 27). அவருக்கு வீரனுக்குரிய மரியாதையுடன் ஆங்கிலேயர் வழியனுப்பு விழா நடத்தினர். இந்தியாவிலிருந்த ஐரோப்பிய மாதர்கள் டயருக்கு ரூ.20,000 கொண்ட பண முடிப்பையும் வீரவாளையும் பரிசாகக் கொடுத்தனர்.

**ரௌலட் சட்டம்**

டாக்டர் கிட்சுலு, சத்யபாலைச் சிறையிலிட்டது, ஜாலியன் வாலாபாக் படுகொலை, இராணுவச்சட்ட நடவடிக்கைகள், அமிர்தசரஸ் தலைவர்களைத் தண்டித்தது, ஹண்டர் குழுவின் ஒரு சார்பான விசாரணை, காங்கிரஸ் விசாரணைக்கு சோதனைகளை உதாசீனப்படுத்தியது, பிரிட்டிஷ் பாராளுமன்றம் டயரைப் பாராட்டியது ஆகியவை காந்தியிடம் மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தின. விளைவு? ஒத்துழையாமை இயக்கம்.

**மதிப்பீடு**

ரௌலட் சத்தியாக்கிரகம் காந்தி மேற்கொண்ட முதல் அகில இந்தியப் போராட்டமாகும். அப்போராட்டத்தின் மூலமாகக் காந்தி தேசத் தலைவரானார். இந்திய மக்கள் சத்தியாக்கிரக போராட்டத்துக்கு அறிமுகமானார்கள். அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டது. பஞ்சாப் படுகொலை தங்களுக்கேற்பட்ட துன்பம் எனப் பிற பகுதி மக்களும் எண்ணத் தலைப்பட்டனர். ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்படாமையாலும், வன்முறை நிகழ்ச்சிகளைக் காந்தியால் தடுக்க முடியவில்லை என்பதாலும் சத்தியாக்கிரகம் ரௌலட் சத்தியாக்கிரகம் தோல்வியடைந்தது எனக் கூறலாம். சரியல்ல சூடுபிடித்துத் தீவிரமடைந்த நேரத்தில் காந்தி அதை நிறுத்தியது

என்று வாதிடுவோருமுள்ளனர். வாய்மையையும், அகிம்சையையும், அறநெறியையும் பலி கொடுத்துப் போராட்டம் வெற்றி பெறுவதை விரும்பவில்லை காந்தி. ரௌலட் சத்தியாக்கிரகத்தை நிறுத்தியது காந்தியின் தலைமையையோ அல்லது செல்வாக்கையோ எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. மாறாகக் காந்தியின்மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை வளரவே செய்தது. மேலும், ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்படவில்லையேயன்றி, அது செயல்படுத்தப் படவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பார்க்கும்போது ரௌலட் சத்தியாக்கிரகம் வெற்றிபெற்றது என்றே கூற வேண்டும்.

# 20. ஒத்துழையாமை இயக்கம், 1920-22

> ஒத்துழையாமை இயக்கம் மக்களை புதிய நம்பிக்கையோடு புதிய எதிர்பார்ப்போடு சுதந்திரத்துக்காகப் போராடும் ஆற்றலைப் பெறுவதற்கான புனித துவக்கமாகும்.
>
> - ஆர்.சி. மசூம்தார்

**சூழ்நிலைகள்**

ஆங்கிலேய அரசாங்க விசுவாசியாக இருந்த காந்தி அரசாங்க விரோதியானார். முதல் உலகப்போரின்போது அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்காக முன்னின்று ஒத்துழைப்பு நல்கிய காந்தி போர் முடிந்த பின்னர் ஆட்சிக்கெதிராகப் போராட்டத்தைத் துவக்கினார். காந்தியின் நோக்கிலும் போக்கிலும் ஏற்பட்ட இந்த அடிப்படை மாற்றத்திற்குப் பல காரணங்கள் இருந்தன. போர்க் காலத்தில் இங்கிலாந்து இக்கட்டான நிலையில் இருந்தபோது இந்திய மக்கள் காலத்தால் உதவி செய்தனர். ஆனால் செய்நன்றி கொன்ற அரசு அவர்களைப் பாராட்டுவதற்குப் பதில் ரௌலட் சட்டத்தை இயற்றித் தண்டிக்கத் துடித்தது. பஞ்சாப் படுகொலையும் அதையொட்டிப் பிறப்பிக்கப்பட்ட இராணுவச் சட்ட நடவடிக்கைகளும் காந்தியின் உள்ளத்தில் வேதனை வடுக்களை உண்டாக்கின. பஞ்சாப் நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரித்த ஹண்டர் குழு அறிக்கையும், அதுபற்றி பிரிட்டிஷ் பாராளுமன்ற விவாதங்களும் பாதிக்கப்பட்ட இந்தியருக்கு நீதி வழங்குவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் துருக்கிச் சுல்தானுக்கிழைத்த நம்பிக்கை துரோகம் காந்தியை அதிர்ச்சியடையச் செய்தது. இத்தகைய சூழ்நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நீதி நியாய உணர்வில் காந்திக்கிருந்த நம்பிக்கை அற்றுப் போயிற்று. எனவே, இந்த அநீதிகளுக்கெல்லாம் தீர்வு காண ஆத்ம ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கத் தீர்மானித்தார் காந்தி.

**ஒத்துழையாமைத் தீர்மானம்**

*1918* மார்ச் மாதத்திலேயே பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிரான இந்திய முஸ்லீம்களின் மனக்கசப்பில் இந்திய சுயராஜ்யத்துக்கான திறவுகோலைக் கண்டார் காந்தி என்று ஜெயில் மினால்ட் ( Gail Minault ) குறிப்பிட்டுள்ளார். இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உறுதி செய்து கொண்டு ஆங்கிலேய ஆட்சியோடு மோத வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் காந்தி கிலாபத் இயக்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார். அதற்கு பிரதிபலனாக முஸ்லீம்கள் காந்தி துவக்கிய ரௌலட் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவளித்தனர். *1920* மார்ச் *10*ஆம் நாள் கிலாபத் மாநாடு பின்பற்றுவதற்கான செயல்திட்டம் பற்றிய அறிக்கையை ( Gandhiji`s

Manifesto) வெளியிட்டார் காந்தி. அந்த அறிக்கையில்தான் காந்தி முதன்முதலாகத் தனது ஒத்துழையாமை இயக்கம் பற்றிய திட்டத்தை விரிவாகக் கூறியதாக பி. பட்டாபி சீத்தாராமையா கருதுகிறார். காந்தியின் அறிக்கையின் அடிப்படையில்தான் கிலாபத் மாநாடு நியமித்த குழு ஒத்துழையாமைத் திட்டத்தைப் பற்றிய தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது (1920 ஜூன் 2). அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி ஒத்துழையாமைத் திட்டம் ஆகஸ்டு முதல் தேதியன்று செயல்படுத்தப்பட்டது. அந்த முக்கியத் திட்டத்தைப்பற்றி முடிவெடுக்க லாலா லஜபதிராய் தலைமையில் சிறப்பு காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது (செப்.4-9). அக்கூட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றிய தீர்மானத்தைக் காந்தி முன்மொழிய டாக்டர் கிட்சுலு வழிமொழிய மோதிலால் நேருவும், அலி சகோதரர்களும் ஆதரித்தனர். சி.ஆர்.தாஸ், பி.சி.பால், எம்.எம்.மாளவியா போன்றோர் அத்தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தனர். எனினும் ஒத்துழையாமைத் தீர்மானம் 1855க்கு 873 என்ற வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. சிறப்பு காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தை நாகபுரி காங்கிரஸ் (1920 டிசம்பர்) அங்கீகரித்தது. நாகபுரியில் கூடிய காங்கிரசில் தான் காங்கிரசின் அரசியலமைப்பு திருத்தப்பட்டு அதன் குறிக்கோள் தெளிவாக்கப்பட்டு மக்கள் அமைப்பாக மாற்றப்பட்டது. நாகபுரி காங்கிரசில்தான் அரசியல் விடுதலைக்கான அகில இந்திய ஒத்துழையாமை இயக்கத்தின் தன்னிகரற்ற தலைவராக காந்தி அங்கீகரிக்கப்பட்டார்.

**இயக்கத் திட்டம்**

1920 மார்ச் 10ஆம் நாள் வெளியிடப்பட்ட காந்தியின் அறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் நாகபுரி காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒத்துழையாமைத் தீர்மானம். அத்தீர்மானம் இரண்டு அம்ச ஒத்துழையாமைத் திட்டத்தை அங்கீகரித்தது; ஒன்று எதிர்மறை ( Negative )த் திட்டம்; மற்றது உடன்பாட்டு ( Positive )த் திட்டம். சட்டமன்ற, நீதிமன்ற கல்வி நிலைய, போலீஸ், இராணுவப் புறக்கணிப்பு, விதேசிப் பொருள் விலக்கம், வரி கொடாமை ஆகியவை எதிர்மறைத் திட்டத்தில் அடங்கும். சுதேசி, கதர் நூற்றல், நெய்தலை ஊக்குவித்தல், தீண்டாமை நீக்கம் மூலம் சமுதாயச் சமத்துவம், இந்து-முஸ்லீம் ஒற்றுமை ஆகியவை உடன்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.

**சட்டமன்றப் புறக்கணிப்பு**

இந்தியச் சட்டமன்றங்களை களங்கப்பட்ட அமைப்புகளாகக் கருதினார் காந்தி. அவை அரசியல் தூய்மையைக் கெடுப்பதாகக் கருதினார் அவர். எனவே சட்டமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1920 நவம்பரில் நடக்கவிருந்த சட்டமன்றத் தேர்தலையொட்டி ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டதால் அபேட்சகர்கள் போட்டியிட வேண்டாம் என்றும், போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் போட்டி பிரச்சாரம் செய்யப்பட்டது. காங்கிரஸ் கிலாபத் தலைவர்கள் சட்டமன்ற புறக்கணிப்புக்கு ஆதரவாக சூறாவளிச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டனர். பஞ்சாப், பம்பாய், பீகார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றில் சட்டமன்றப் புறக்கணிப்பு நல்ல பயனைத் தந்தது. சில இடங்களில்

வாக்குப்பெட்டிகள் காலியாகவே இருந்தன. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி மிதவாதிகளும், லிபரல் கட்சியினரும் போட்டியிட்டனர். ஒரு சில இடங்களைத் தவிர சட்டமன்றப் புறக்கணிப்பு முழு வெற்றியைத் தந்ததாகக் கூறியுள்ளார் ஜே.பி. கிருபளானி.

34671

**நீதிமன்றப் புறக்கணிப்பு**

நீதிமன்றங்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எச்சங்களாகவும், சீர்கேட்டின் சதுப்பு நிலங்களாகவும் கருதினார் காந்தி. நீதிமன்றங்களை புறக்கணித்து, மக்களின் வழக்குகளைப் பஞ்சாயத்து மன்றங்களின்மூலம் தீர்த்துக் கொண்டால் ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்களில் ஒன்று வீழ்ந்துவிடும் என்று எண்ணினார் அவர். அதன்படி நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் தங்களது தொழிலைத் துறந்தனர். தமிழ்நாட்டில் வக்கீல் தொழிலை விட்டவர்கள் தான் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபாலகிருஷ்ணன். புகழ்பெற்ற பிரபல வழக்கறிஞர்களாகத் திகழ்ந்த லாலா லஜபதிராய், சி.ராஜகோபாலாச்சாரி, டி.பிரகாசம் போன்றோர் அதிக வருவாய் தரக்கூடிய வக்கீல் தொழிலைவிட்டு நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். வக்கீல் வேலையை விட்டதால் துன்புறுவோருக்கு உதவ சேத் ஜம்னாலால் பஜாஜ் நிதி சேர்த்துக் கொடுத்தார். பல வழக்குகள் பஞ்சாயத்து நீதிமன்றங்களில் தீர்த்துக் கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் முத்திரை வருவாய் ( Income from Stamps ) கணிசமாகக் குறைந்தது.

**கல்விக்கூடப் புறக்கணிப்பு**

அரசாங்கக் கல்விக் கூடங்களில் கல்வி கற்பது பாவம் எனக் கருதினார் காந்தி. ஆங்கிலக் கல்வி நஞ்சு கலந்த பால் போன்றது என்று வர்ணித்தார் அவர். காந்தியின் கட்டளைக்கிணங்க அலிகார் எம்.எ.ஓ.கல்லூரி மாணவர்கள் கூட்டம் போட்டுக் கல்லூரியைப் புறக்கணித்து ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுவதென முடிவெடுத்தனர். கல்லூரியை விட்டு வெளியேறினர். பல அரசாங்கப் பள்ளிகள் மூடிக்கிடந்தன. காசி இந்து பல்கலைக் கழகம் மாணவர்களின் வேலை நிறுத்தத்தால் செயலிழந்தது. வங்காளத்தில் அனைத்து அரசாங்கக் கல்விக் கூடங்களும் மூடப்படுவதற்கு சி.ஆர்.தாஸ், அபுல் கலாம் ஆசாத் போன்றோர்களின் பிரச்சாரம் காரணமாயிருந்தது. நான்கு மாதங்களுக்குள் அலிகார் தேசிய முஸ்லீம் பல்கலைக் கழகம், குஜராத் வித்யாபீத், பீஹார் வித்யாபீத், காசி வித்யாபீத், வங்காள தேசியப் பல்கலைக் கழகம், திலகர் மகாராஷ்டிரா வித்யாபீத் மற்றும் நூற்றுக்கணக்கான தேசியப் பள்ளிகளும் நாடெங்கும் துவக்கப்பட்டன.

**விதேசித் துணிப் புறக்கணிப்பு**

வெளிநாட்டுத் துணியைத் தொட்டாலே தீட்டுப்பட்டு விடும் எனக் கருதியவர் காந்தி. இந்தியத் துணித் தொழில் நசிந்து போனதற்குக் காரணமே மேலைநாட்டுத் துணி இறக்குமதியேயாகும். எனவே விதேசித் துணியைக் கொளுத்துவதன் மூலம் எதிர்ப்பைக் கூறுவதற்கான நாளும் குறிப்பிடப்பட்டது. பம்பாயில் நடைபெற்ற சொக்கப் பனையில் ( Bonfire ) காந்தியும் கலந்து கொண்டார்.

அலகாபாத்தில் ஜவகர்லால் நேருவின் தூண்டுதலால் அந்நியத் துணியை வாங்குவதில்லையெனத் துணி வியாபாரிகள் சபதமெடுத்தனர். விதேசி துணிப் புறக்கணிப்பை வெற்றிகரமாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கென 'வியாபாரி மண்டல்' எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. வங்காளத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் விதேசித் துணி விற்பனை செய்யும் கடைகளைக் காங்கிரஸ்காரர்களும், கிலாபத் தொண்டர்களும் மறியல் செய்தனர். தமிழ்நாட்டில் பல இடங்களில் துணி வியாபாரிகளே அந்நியத் துணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தனர்.

**போலீஸ் இராணுவப் புறக்கணிப்பு**

புறக்கணிப்புப் போராட்டத்திலேயே மிகவும் தீவிரமானதெனக் கருதப்பட்டது போலீஸ், இராணுவப் பணிப் புறக்கணிப்பேயாகும். ஒத்துழையாமைத் திட்டத்தில் இதுபற்றித் தெளிவாகக் கூறப்படவில்லையாயினும் காந்தி உரிய நேரத்தில் விளக்கமும் செயல் திட்டமும் தருவார் என எதிர்பார்க்கப்பட்டது. காந்தியும் காங்கிரசும் இதுபற்றித் தயங்கிக் கொண்டிருந்த போது கிலாபத் முஸ்லீம்கள் தீவிரமாகச் செயல்பட்டனர். அவர்கள் போலீஸ், இராணுவப் பணித் துறப்பில் குறியாக இருந்தனர். இராணுவத்தில் பணிபுரிவதோ அல்லது பட்டாளத்துக்கு ஆள்ச் சேர்க்க உதவி செய்வதோ இஸ்லாமிய நம்பிக்கைக்கும், சட்டத்திற்கும் விரோமானதென்று 1921 ஜுலை மாதம் அகில இந்திய கிலாபத் குழு அறிவித்தது. இராணுவத்தில் பணிபுரியும் முஸ்லீம்கள் இஸ்லாமிய சட்டங்களை மீறியவர்களாவர் என சமயக் கட்டளையும் ( Fatwa ) பிறப்பிக்கப்பட்டது. இதுபற்றிய முஸ்லீம் இராணுவ வீரர்களிடையே பிரச்சாரம் செய்யும்பொருட்டு அலிகார் பல்கலைக் கழக மாணவர்கள் பஞ்சாபுக்கும் எல்லைப்புறப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இது சம்மந்தமாக அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களை ஆதரித்த காந்தி 'எந்த இந்தியனும் இராணுவத்திலும் அரசுத் துறையிலும் பணியாற்றுவது பாவம்' என்று கூறினார். போலீஸ் படையிலிருந்து குறிப்பாக ஐக்கிய மாகாணம், வங்காளம், பம்பாயில் நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் படைகளிலிருந்து பல முஸ்லீம்கள் பதவி விலகினர்.

**சுதேசி நிர்மாணத் திட்டம்**

இதைச் செய்யக்கூடாதெனக் கட்டளையிட்ட காந்தி இவற்றைச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தத் தவறவில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின்போது சுதேசி நிர்மாணத் திட்டம் தேசம் முழுவதும் பின்பற்றப்பட்டது. வங்கப் பிரிவினையை எதிர்த்துத் துவக்கப்பட்ட சுதேசி இயக்கத்தைப் பின்பற்றி காந்தி இந்நிர்மாணத் திட்டத்தைப் பொருளாதார நல நடவடிக்கையாக மட்டும் கொள்ளாமல் சமயக் கடமையாகவும் கருதினார். ராட்டையில் கதர் நூல் நூற்றலும், கதர் நெசவும் மக்களிடையே பரப்பப்பட்டன. கதர்நூல் நூற்பதும், கதராடை அணிவதும் நாட்டுப் பற்றுமிக்க தேசியப் போராட்ட வீரரின் சின்னமாயிற்று. அரசியல் தொண்டர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் கதர் நூல் நூற்கவும், கதராடை அணியவும் முற்பட்டனர். கிராமக் குடிசைக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சேர்ந்த திலகர் நிதி, கதர்

அபிவிருத்திக்கும், ராட்டை விநியோகத்துக்கும் பயன்படுத்தப்பட்டது. கதரியக்கத்தில் நாற்பது இலட்சம் தொண்டர்களுக்குமேல் சேர்ந்தனர். இலட்சக்கணக்கான ராட்டைகள் விநியோகிக்கப்பட்டன., சுதேசிப் பொருள்களை விற்பனை செய்வதற்காக 'சுதேசிக் கடைகள்' திறக்கப்பட்டன.

**கன்னாட் கோமகன் வருகைப் புறக்கணிப்பு**

மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தைத் துவக்கி வைப்பதற்காக வேல்ஸ் இளவரசர் வருவதாக இருந்தது. ஆனால் இந்தியாவில் அரசியல் சூழ்நிலை சரியாக இல்லாமையால் அவருக்குப் பதில் கன்னாட் கோமகன் (Duke of Connaught) வருகை புரிந்தார். கடந்த காலத் தவறுகளை மறந்து மன்னிக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். எனினும் மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ தயாராயில்லை. முதலில் சென்னைக்கு வந்த கன்னாட் கோமகனை *(1921 ஜனவரி 10)* மக்கள் புறக்கணித்தனர். கடைகள் அடைக்கப்பட்டன. அன்று மாலை நடைபெற்ற மெரீனா கடற்கரைக் கூட்டத்தில் கோமகனது வருகை கண்டிக்கப்பட்டது. கடற்கரையின் மற்றொரு பக்கத்தில் நீதிக் கட்சியினர் அவருக்கு வரவேற்பளித்தனர்! இரண்டு நாட்களுக்குப் பின்னர் கோமகன் சென்னை சட்டமன்றத்தைத் துவக்கி வைத்தார். கல்கத்தா *(ஜனவரி 28)*, டெல்லி *(பிப்.8-9)*, பம்பாய் *(பிப்.23)* ஆகிய நகரங்களிலும் கோமகனது வருகை புறக்கணிக்கப்பட்டது. கன்னாட் கோமகன் மிக்க மனவருத்தத்துடன் பம்பாயை விட்டுப் புறப்பட்டு *(பிப்.28)* இங்கிலாந்து சென்றார்!

**வன்முறை நிகழ்ச்சிகள்**

*1921* மார்ச் மாதம் நான்கானா குருத்துவாராவில் *195* சீக்கிய யாத்திரிகர்கள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த நான்கானா படுகொலை (Nankana Massacre)யை பெஜவாடாவில் கூடிய காங்கிரஸ் *(ஏப்ரல்)* வன்மையாகக் கண்டித்து, சீக்கியர்களுக்கு அதனுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தது. அஸ்ஸாமில் சி.ஆர்.தாசும் அவரது சகாக்களும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தினர். அதனால் தொழிலாளர்கள் குடிபெயர்ந்து சென்றதோடு வன்முறை நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. கல்கத்தாவில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலும் வன்முறை ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். சென்னையில் *800* ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்துக் கெதிராக பக்கிங்காம் மில்லுக்கு வேலைக்கு திரும்பியதால் *(ஜூன் 27)* தொழிலாளரிடையே அமைதியின்மையும் வன்முறை நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. அதேபோன்று ஐக்கிய மாகாணத்தில் கிசான் கிளர்ச்சிகள் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தன. தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் போராட்டம் பல வன்முறை நிகழ்ச்சிகளுக்கு வழிகோலியது. வன்முறை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போலிருந்தது மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி.

**மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி, 1921**

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மலபாரில் வந்து தங்கிய அரேபிய வியாபாரிகள் வழித்தோன்றல்களே 'மலபார் மாப்பிள்ளைகள்' (Malabar Mappillas). அவர்கள்

இஸ்லாமிய சமய உணர்வுமிக்கவர்கள். கிலாபத் இயக்கத்தின்போது மலபார் மாப்பிள்ளைகள் எழுச்சி பெற்றனர். 1921 பிப்ரவரி 16ஆம் நாள் யாகூப் ஹாசன், மாதவ மேனன், கோபால மேனன், மொய்தீன் கோயா போன்ற கிலாபத் காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது மாப்பிள்ளைகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். பத்து நாட்களுக்குப் பிறகு வைப்புப் பணம் கட்டத் தவறியமைக்காக எட்டு மாப்பிள்ளைகள் கைது செய்யப்பட்டனர். இறித்துவ ஆட்சியாளருக்கு அடிபணியக் கூடாது எனக் கூறிய பிரசுரம் வெளியிடப்பட்டது. பதட்டமுற்ற சென்னை அரசாங்கம் அதைத் தடை செய்தது. அலி முஸலியார் (Ali Musaliar) என்ற திருரங்காடி சமயத் தலைவர் அரசாங்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்காக இரகசிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். ஆப்கானிஸ்தான் அமீர் காந்தி, அலி சகோதரர்கள் ஆகியோரின் துணையோடு இந்தியாவின்மீது படையெடுக்கப் போகிறார் என்ற வதந்தி காட்டுத்தீ போல பரவியது! அந்தச் சமயத்தில் போலீசார் கிழகப்பள்ளி மசூதியை உடைத்து உள்ளே சென்று ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றதா என்று சோதனையிட்டு அது சம்பந்தமாக மூவரைக் கைது செய்தபோது கிளர்ச்சி வெடித்தது.

அரசாங்கத்துக்கெதிராக எழுந்த அக்கிளர்ச்சியின்போது நிர்வாகம் செயலிழந்தது. கஜானாக்கள் உடைக்கப்பட்டன. ஆவணங்கள் கொளுத்தப்பட்டன. அரசாங்கக் கட்டிடங்கள் தீக்கிரையாயின. அரசாங்க அதிகாரிகள் உயிருக்கஞ்சி ஓடி ஒளிந்தனர். போலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. பல ஐரோப்பியர்கள கொல்லப்பட்டனர். கிலாபத் ராஜ்யம் ஏற்படுத்தப்பட்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அலி முஸலியார் கிலாபத் அரசன் என்று அறிவிக்கப்பட்டார்! (1921 ஆகஸ்டு 21). எரநாடும், வள்ளுவநாடும் கிலாபத் அரசுகளாக அமைக்கப்பட்டன. கிலாபத் கொடி பறக்க விடப்பட்டது. கிலாபத் நாணயம் வெளியிடப்பட்டது. அலி முஸலியார் அமைச்சர்களை நியமித்துக் கொண்டு, தனியே இராணுவத்தையும் ஏற்படுத்திக் கொண்டு கிலாபத் ராஜ்ய பரிபாலனம் செய்யத் துவங்கினார்.

அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு மாப்பிள்ளைகள் கிளர்ச்சியை முறியடித்தது. கிளர்ச்சிக்கார மாப்பிள்ளைகள் அருகேயிருந்த காடுகளுக்குச் சென்று மறைந்து கொண்டனர். கிலாபத் ராஜ்யம் அமைக்கப்பட்டதிலிருந்து இந்துக்கள் மாப்பிள்ளைகளை ஆதரிப்பதை நிறுத்திக் கொண்டனர். அரசாங்கத்துக் கெதிராகப் போராடிக் கொண்டிருக்கும் மாப்பிள்ளைகளின் உதவிக்கு வரவில்லையே என்ற கோபத்தில் கிளர்ச்சிக்கார மாப்பிள்ளைகள் இந்துக்களுக்கெதிராகத் திரும்பினர். சமய வெறியர்களும் சந்தர்ப்பவாதிகளும் சமூக விரோத சக்திகளும் வன்முறையில் இறங்கினர். இந்துக்கள் கூட்டாகக் கொலை செய்யப்பட்டனர். கட்டாயமாக மதமாற்றம் செய்யப்பட்டனர். கோயில்கள் இடிக்கப்பட்டன: இந்துப் பெண்கள் மான பங்கப்படுத்தப்பட்டுக் கற்பழிக்கப்பட்டனர். இந்துக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இராணுவத்தின் துணைகொண்டு அரசாங்கம் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியை அடியோடு அடக்கியது. கிளர்ச்சிக்காரர்கள் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக செயல்பட்ட கிலாபத் இயக்கம் மலபாரில் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியில் முடிந்தது. அரசாங்கத்துக்கெதிராகத்

துவக்கப்பட்ட அந்தக் கிளர்ச்சி இந்துக்களுக்கெதிராகத் திசை திரும்பியது. நாட்டுப் பற்றைவிடச் சமய வெறியே மலபார் முஸ்லீம்களை ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடச் செய்தது என்பது தெளிவாயிற்று. நம்பிக்கை அவநம்பிக்கையாயிற்று. இந்து-முஸ்லீம்களிடையே பரஸ்பர துவேஷமும் சந்தேகமும் வளரத் துவங்கின. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை, கிலாபத் இயக்கம் பலவீனப்பட்டது. காந்தி கட்டிய இந்து-முஸ்லீம் ஒற்றுமைக் கப்பல் மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி என்ற பாறைமீது மோதி நொறுங்கியது.

**வேல்ஸ் இளவரசர் வருகைப் புறக்கணிப்பு**

அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காக வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவரது வருகையை வெற்றிகரமாகக் கொண்டாடுவதில் அரசாங்கம் ஆர்வமாக இருந்தது. ஆனால் காங்கிரஸ் அவரது வருகையை வெற்றிகரமாகப் புறக்கணிப்பதில் குறியாக இருந்தது. இளவரசர் பம்பாய் வந்தபோது (1921 நவ.17) அவரை வேலை நிறுத்தமே வரவேற்றது! போலீசுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டது. சத்தியாகிரகிகளுக்கும் விசுவாசிகளுக்குமிடையே கைகலப்பு நடந்தது. கடைகளை மூட மறுத்த பார்சிகள் தாக்கப்பட்டனர். காந்தி, சரோஜினி நாயுடு போன்றோர் அங்கிருந்து கூட்டத்தைக் கட்டுப்படுத்தவோ வன்முறையைத் தவிர்க்கவோ முடியவில்லை. ஐந்து நாட்களுக்கு வன்முறை தொடர்ந்தது! 58 பேர் இறந்தனர். 381 பேர் காயமுற்றனர். கல்கத்தாவில் சி.ஆர்.தாஸ் அவரது மனைவி, மகன் மற்றும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேல்ஸ் இளவரசர் வருகைப் புறக்கணிப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டனர். ஐக்கிய மாகாணத்தில் மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, கோவிந்த வல்லபந்த் ஆகியோரும், பஞ்சாபில் லஜபதி ராயும் பிறரும் கைதானார்கள். சென்னையில் நடந்த கல்வீச்சில் பல வாகனங்கள் சேதமடைந்தன. வெல்லிங்டன் தியேட்டர் தாக்கப்பட்டது. அதன் உரிமையாளர் சுட்டதில் ஒருவர் இறந்தார். இருவர் காயமுற்றனர். ஒரு கூட்டம் சர் தியாகராய செட்டியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு அவரைச் சட்டமன்றக் கூட்டத்துக்குச் செல்ல முடியாதபடி தடுத்தது. டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், சிங்காரவேலு செட்டி போன்ற காங்கிரஸ் தலைவர்களால் வன்முறையைத் தவிர்க்க முடியவில்லை (1922 ஜனவரி 13)).

**காந்தியின் இறுதி எச்சரிக்கை**

வேல்ஸ் இளவரசரின் சுற்றுப்பயண வெற்றியில் நாட்டம் கொண்ட வைசிராய் ரீடிங் பிரபு (Lord Reading) சமாதான முயற்சியை மேற்கொண்டார். கே.என்.குன்ஸ்ரு, ஜம்னாதாஸ், துவாரக தாஸ், டெஜ் பகதூர், அன்னிபெசன்ட், மாளவியா போன்றோர் அம்முயற்சியில் ஈடுபட்டனர். அலி சகோதரர்களை விடுவிக்காத வரை எந்த சமரசப்பேச்சிலும் கலந்துகொள்ள காந்தி தயாராயில்லை. சி.சங்கரன் நாயரின் முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டமும் வெற்றி பெறவில்லை. வரிகொடா இயக்கத்தை துவக்குவது பற்றி காந்தி தீவிரமாகத் திட்டமிட்டு வந்தார். அப்போது ஆந்திராவில் கொண்ட வெங்கடப்பையா வரிகொடா இயக்கத்தைத் துவங்கிவிட்டார். அதனால் வன்முறை நிகழ்ச்சிகளும் அதைத் தொடர்ந்து அடக்கு முறையும் நிகழ்ந்தன.

காந்தி கூறிய ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தைப் பெற்றுவிடலாம் என்ற ஆர்வத்தில் மக்கள் கிளர்ச்சி செய்ய மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்ட காந்தி வைசிராய் ரீடிங் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில் இறுதி எச்சரிக்கை விடுத்தார் (1922 பிப்ரவரி1). வைசிராய்க்கு அக்கடிதம் கிடைத்த ஏழு நாட்களுக்குள் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் பத்திரிகை சுதந்திரம் பூரணமாக வழங்கப்பட வேண்டுமெனவும், கிலாபத், பஞ்சாப் அநீதிகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக் கூடாதென்றும் அரசாங்கம் இவற்றுக்குச் சம்மதிக்காவிடில் பர்தோலியில் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவங்கப் போவதாகவும் எச்சரித்திருந்தார். காந்தியின் எச்சரிக்கைக்கு வைசிராய் செவி சாய்க்கவில்லை. எனவே காந்தி சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கத் தயாரானார். ஆனால் சௌரி சௌராவில் நடந்த நிகழ்ச்சி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

### சௌரி சௌரா நிகழ்ச்சி

ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூரிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிராமமே சௌரிசௌரா. அங்கு விதேசிப் பொருள் புறக்கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஒரு போலீஸ்காரர் தொண்டர்கள் சிலரைத் தாக்கிவிட்டார். அதையடுத்து 500 தொண்டர்களும் கிராமத்தார் புடைசூழ காவல் நிலையத்துக்குச் சென்று அதிகாரியை சந்தித்து முறையிட்டனர். சமரசமேற்பட்டு அக்கூட்டத்தினர் திரும்பி வந்து கொண்டிருக்கையில் பின்னால் பெருங்கூக்குரல் எழுந்தது. அமைதியாகத் திரும்பிக் கொண்டிருந்த மக்களைப் போலீசார் மோசமாகத் தாக்கிக் காயப்படுத்தியதாகக் கூறப்பட்டது. கோபமுற்ற கூட்டத்தினர் கல்வீச்சில் ஈடுபட்டனர். போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறங்கியது. தோட்டாக்கள் தீர்ந்ததும் போலீஸாரைப் பிடித்துக் காவல் நிலையத்துக்குள் தள்ளித் தீ வைத்து விட்டனர். 12 போலீசாரோடு காவல்நிலையம் தீக்கிரையாயிற்று! வேல்ஸ் இளவரசரின் பம்பாய் வருகையின்போது வன்முறைக் கலகங்கள் ஏற்பட்ட நான்கு மாதங்களுக்குள் சௌரிசௌராவில் வெடித்த வன்முறை நிகழ்ச்சி காந்தியைக் கலக்கமுறச் செய்தது.

### போராட்டம் நிறுத்தப்பட்டது

ஒத்துழையாமை இயக்கம் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்தது. அகிம்சைப் போராட்டம் வன்முறை நிகழ்ச்சிகளுக்குக் காரணமாய் இருக்கக்கூடாது எனக் கருதினார் காந்தி. அகிம்சைப் போராட்டத்துக்குரிய முழுப்பயிற்சியையும் மக்கள் பெறவில்லை. போராட்டத் தலைவர்கள் பலரும் சிறைக்குள் இருந்தனர். வன்முறை நிகழ்ச்சிகளைக் காரணமாகக் கொண்டு அரசாங்கம் அடக்கு முறையைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. மக்களின் உடலுக்கும் உயிருக்கும் ஏற்படக்கூடிய இழப்பை எண்ணிப்பார்த்த காந்தி சிறைக்கு வெளியேயிருந்த காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களோடு கலந்துபேசி ஒத்துழையாமைப் போராட்டத்தை நிறுத்தி விட்டார் (1922 பிப்.12). மக்களிடையே செல்வாக்கு பெறுவதைப் பெரிதாகக் கருதாது, சமய சந்தர்ப்பத்துக்கேற்ப நடந்துகொண்டு புகழ் பெறுவதைத் தவிர்த்து, கொள்கையே

பெரிதெனத் துணிவுடன் செயல்பட்ட காந்தியைப் போன்ற மனிதரை வரலாற்றில் காண்பது மிகவும் அரிது எனக் குறிப்பிட்டுள்ளார் வில் டூரண்ட் (Will Durant) ஒத்துழையாமைப் போராட்டத்தைக் கைவிட்டு சுதேசி நிர்மாணத் திட்டத்தை மேற்கொள்ளச் சொன்ன காந்தியை அரசாங்கம் கைது செய்தது (மார்ச் 10). விசாரணையின்போது பம்பாய், சென்னை, சௌரிசௌரா மற்றும் பிற இடங்களில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார் காந்தி. காந்தியின் விரோதிகூட அவரது உயர்ந்த இலட்சியங்களையும், நெறிதவறாத ஒழுக்க நடவடிக்கையையும் பாராட்டுவர் எனக் கூறிய நீதிபதி புரூம்பீல்டு (Broomfield) காந்திக்கு ஆறாண்டுகள் சிறை தண்டனை விதித்தார். எனினும் உடல் நலக்குறைவேற்பட்டதால் காந்தி 1924 பிப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

**சில குறைபாடுகள்**

காந்தி ஒத்துழையாமைப் போராட்டத்தைத் திடீரென நிறுத்தியதைப் பலரும் கண்டித்தனர். கன்னியாகுமரியில் ஒரு கிராமம் வன்முறையில் ஈடுபட்டது என்பதற்காக இமாலயத்தின் அடிவாரத்திலுள்ள ஒரு கிராமம் ஏன் தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டார் மோதிலால் நேரு. ஒத்துழையாமை இயக்கம் வெற்றிபெற வேண்டிய நேரத்தில் உணர்ச்சி வயப்பட்டு காந்தி நிறுத்திவிட்டார் எனக் குறைபட்டுக் கொண்டார் சி.ஆர்.தாஸ். போராட்டத்தின் எல்லாமுனைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கையில் ஒத்துழையாமை இயக்கத்தைப் பலப்படுத்துவதற்குப் பதில் காந்தி அதை நிறுத்திவிட்டதை அறிந்து கோபமுற்றதாகக் குறிப்பிட்டுள்ளார் ஜவஹர்லால் நேரு. சில வன்முறை நிகழ்ச்சிகளுக்காக பிறப்புரிமைப் போராட்டத்தை காந்தி நிறுத்தியிருக்கக் கூடாதென்றார் சி. ராஜகோபாலாச்சாரியார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் காந்தியைக் கண்டித்தது (1922 பிப்.24). காந்தியின் செயல்கண்டு கிலாபத் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள் கடுங்கோபம் கொண்டனர். தங்களை நட்டாற்றில் விட்டுவிட்ட சர்வாதிகாரி காந்தி என்று அவர்கள் ஆத்திரப்பட்டனர். சிறையில் அடைபடாதிருந்திருந்தால் காந்தியின் முடிவை மீறி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருப்பேன் என்று முகமது அலி தெரிவித்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டன. கிலாபத் பிரச்னையையும், பஞ்சாப் படுகொலைப் பிரச்னையையும் இணைத்தது சரியல்ல. முஸ்லீம்கள் கிலாபத்துக்காகப் போராட இந்துக்கள் ஓராண்டில் சுயராஜ்யத்தை அடையப் பாடுபட்டனர்! சட்டமன்ற நீதிமன்ற, கல்விக்கூட புறக்கணிப்பின் வெற்றி மத்தியதர வகுப்பாரின் ஆதரவைப் பொறுத்திருந்தமையால் அப்போராட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. ஒத்துழையாமைப் போராட்டத்தில் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் உரிய பங்கில்லாமல் போய்விட்டது. சி.ஆர்.தாஸ், மோதிலால் நேரு, மாளவியா, கஸ்தூரி ரங்க அய்யங்கார் போன்ற தலைவர்களுக்கு காந்தியின் ஒத்துழையாமைத் திட்டத்தில் நம்பிக்கை இல்லை. பம்பாய், சென்னை, பீகார், தார்வார், கராச்சி, மலபார், அஸ்ஸாம், கல்கத்தா, சௌரிசௌரா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் சாத்வீகப் போராட்டத்தின் அடிப்படையையே தகர்த்துவிட்டன. திடீர்ப் போராட்ட நிறுத்தம் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே

அவநம்பிக்கையை ஏற்படுத்தியது. அரசாங்க அடக்குமுறையை ஊக்குவித்தது. போராட்டம் நிறுத்தப்பட்டவுடன் காங்கிரசுக்கு மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் போய்விட்டது. தொடர்ந்து நீண்டகாலப் போராட்டத்துக்கு மக்களைத் தயார் செய்யாமல் ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டது. கிலாபத்தை அங்கீகரிக்கச் செய்தல், பஞ்சாப் அநீதிக்குப் பரிகாரம் காணல், ஓராண்டில் சுயராஜ்யம் பெறல் போன்ற அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அறிகுறியே தென்படவில்லை. யாவற்றுக்கும் மேலாகப் போராட்டத்தை முன்னறிவிப்பின்றி நிறுத்தியது ஒத்துழையாமை இயக்கத்தின் வெற்றியைப் பெரிதும் பாதித்துவிட்டது.

**வரலாற்றுச் சிறப்பு**

ஒத்துழையாமை இயக்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும், போராட்டம் நிறுத்தப்பட்டது கடுமையாகக் கண்டிக்கப்பட்டாலும், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒத்துழையாமை இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. முதன்முறையாக காங்கிரஸ் காந்தியின் தலைமையில் இந்திய சுதந்திரத்துக்காக நாடு தழுவிய தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டது. நாட்டின் எட்டு திக்குகளும் ஒரே குறிக்கோளை ஒரே கோஷத்தை எதிரொலித்தது. சட்டமன்ற, நீதிமன்ற, கல்விக்கூட, விதேசிப் பொருள் புறக்கணிப்பு, சுதேசி நிர்மாணத் திட்டம் போன்ற தெளிவான திட்டங்களின் அடிப்படையில் போராட்டம் நடத்தப்பெற்றது. அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் மட்டுமின்றி காந்தியின் ஆக்கப்பூர்வமான நிர்மாணத் திட்டங்களிலும் மக்கள் பயிற்சி பெற்றனர். செல்வச் சீமான்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அலுவலர்கள், எழுத்தாளர்கள் ஆகிய சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பொது நோக்கத்துக்காக இப்போராட்டத்தில் பங்கேற்றனர். மக்களுக்கு அந்நிய ஆட்சியின் அடக்கு முறையின் மீதிருந்த அச்சம் அகன்றன. சிறைக்குச் செல்வது அரசியல் புனிதப் பயணமாகக் கருதப்பட்டது. காங்கிரஸ் கட்டுக்கோப்புடன் கூடிய மக்கள் இயக்கமாயிற்று. சத்தியாக்கிரகம் என்ற அகிம்சை ஆயுதம் மேலும் கூராக்கப்பட்டது. நகர மக்கள், கிராம மக்கள் என்று வேறுபாடின்றி அரசியல் கல்வியும் பயிற்சியும் பெற்றனர். கிலாபத் பிரச்னையையும் பஞ்சாப் பிரச்னையையும் ஒன்று சேர்த்ததால் இந்தியாவின் இருபெரும் சமூகத்தினரையும் பொதுப் போராட்டத்தில் ஒன்றாக இணைத்த பெருமை காந்தியைச் சேரும். ஒத்துழையாமை இயக்கத்தின்மூலம் காந்தி ஒரு சத்தியசீலராக கொள்கைப் பிடிப்புள்ள பிடிவாதக்காரராக, ஈடுயிணையற்ற அகிம்சைப் போராட்டத் தலைவராக மக்களின் உள்ளங்களில் என்றும் நீங்கா இடம் பெற்றார்.

# பகுதி - III

## 21. சுயராஜ்யக் கட்சி, 1923-1926

> **சட்டமன்றப் புறக்கணிப்பின் நோக்கம் சுயராஜ்யத்தை அடைவதற்கான தடையை நீக்குவதாகும். அதற்கேற்றபடி சட்டமன்றத்தை வளைக்க வேண்டும் அல்லது ஒழிக்க வேண்டும்.**
>
> **- சி.ஆர்.தாஸ்**

**சட்டமன்ற நுழைவு**

வன்முறை நிகழ்ச்சிகளை அடுத்து ஒத்துழையாமை இயக்கம் காந்தியால் நிறுத்தப்பட்டது. காந்தியும் பிற தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். தேசிய இயக்கம் திடீரென நிறுத்தப்பட்டதால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். காந்தி கைது செய்யப்பட்டமையால் காங்கிரஸ் தலைமையின்றித் தவித்தது. செயல் வேகமுள்ள தலைமைக்காக நாடு ஏங்கியது. 1922 ஜுன் மாதம் லக்னோவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி முடிவெடுக்க முடியவில்லை. எனினும் இதுபற்றிய பரிந்துரை வழங்குவதற்காக சட்டமறுப்பு விசாரணைக்குழு (Civil Disobedience Enquiry Committee) ஒன்றை அமைத்தது அக்கமிட்டி. ஹகிம் அஜ்மல் கான் தலைமையில் அமைக்கப்பட்ட அக்குழு அக்டோபர் மாதம் அதனுடைய அறிக்கையை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையில் காணப்பட்ட பரிந்துரைகளில் மிகவும் முக்கியமானது பஞ்சாப் படுகொலை, கிலாபத் அநீதி ஆகியவற்றைக் கண்டித்து ஒத்துழையாமை இயக்கத்தினர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடலாம்; சட்டமன்றத்தினுள் நுழைந்து ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடரலாம் என்பதாகும். விசாரணைக் குழுவின் இந்த முடிவும் ஒரு மனதான முடிவன்று! சட்டமன்றப் புறக்கணிப்பை எக்காரணம் கொண்டும் தளர்த்துவதோ அல்லது கைவிடுவதோ கூடாதெனக் கருதியோர் அக்குழுவில் இருந்தனர். எனவே சட்டமன்ற நுழைவு பற்றிய இம்முரண்பாட்டை நவம்பரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும், டிசம்பரில் கயாவில் கூடிய காங்கிரசும் விவாதித்தன. இறுதியில் சட்டமன்றப் புறக்கணிப்பு பற்றிய காந்தியவாதிகளின் முடிவே நிலைத்தது. ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு சிறப்பு அம்சமான சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர்வதென முடிவு செய்யப்பட்டது. எனவே சட்டமன்ற நுழைவுக்காக வாதாடிய சித்தாஞ்சன்தாஸ் தனது காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகிப் புதுக்கட்சியைத் துவக்கினார். சூரத் பிளவுக்குப் பிறகு காங்கிரஸ் இரண்டாவது தடவையாக இருகூறாகப் பிரிந்தது. புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பே சுயராஜ்யக் கட்சியாகும்.

### மாற்றம் விரும்பியோர்

காங்கிரசின் கொள்கையான சட்டமன்றப் புறக்கணிப்பில் மாற்றம் வேண்டும் என்று கோரியவர்கள் மாற்றம் விரும்பியோர் ( Pro-Changers ) என்றழைக்கப்பட்டனர். சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, ஹகிம் அஜ்மல்கான், வித்தல்பாய் ஜே.படேல் ஆகியோர் மாற்றம் விரும்பிய முன்னணித் தலைவர்களாவர். சீர்திருத்தப்பட்ட சட்டமன்றம் என்பது அதிகார வர்க்கத்தினர் அணிந்து கொண்டுள்ள முகமூடியாகும். அதை விலக்க வேண்டும் என்று கூறினார் சி.ஆர்.தாஸ். சட்டமன்ற நுழைவு, ஒத்துழையாமை இயக்கத்துக்கு முரணானதன்று என்றும், ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்துக்குள்ளேயும் கொண்டு செல்வதே தங்களது நோக்கமென்றும் அப்படிச் செய்வதும் நேர்மையான வழியேயென்றும் அவர்கள் வாதிட்டனர். சட்டமன்றங்களைக் கைப்பற்றி அவற்றை இயங்கவிடாமல் செய்து, அரசாங்கத்தைச் செயல்படாது முடக்குவதே மாற்றம் விரும்பியோரின் விழைவாகும்.

### மாற்றம் விரும்பாதோர்

சட்டமன்றப் புறக்கணிப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் மாற்றம் விரும்பாதோர் (No Changers) என்றழைக்கப்பட்டனர். எம்.ஏ.அன்சாரி, இ.கே.ரெங்கசுவாமி அய்யங்கார், சி.ராஜகோபாலாச்சாரி ஆகியோர் மாற்றம் விரும்பாத முன்னணித் தலைவர்களாவர். சட்டமன்ற நுழைவு ஆழம் தெரியாமல் காலை விடுவதைப் போன்றது. சட்டமன்றத்துக்குள் இருந்து கொண்டு அதை இயங்கவிடாமல் செய்வதென்பது முன்னுக்குப்பின் முரணானது. அச்செயல் இந்திய விடுதலைப் போராட்டத்தின் வேகத்தைக் குறைத்து விடும் என மாற்றம் விரும்பாதோர் வாதிட்டனர். நிபந்தனையற்ற சட்டமன்றப் புறக்கணிப்பே நாட்டை ஒத்துழையாமை இயக்கத்தின் அடுத்த கூட்டத்துக்குக்கொண்டு செல்ல வல்லது என்று அவர்கள் நம்பினர். காந்தி கூறியது போன்று சட்டமன்ற நுழைவு மிட்டாய் வழங்கியது போல இருக்குமேயன்றி, ரொட்டி தின்றதுபோல் ஆகாது. சட்டமன்றத்தைச் செயலற்றதாக்க சட்டமன்றத்துக்குள் நுழைவதென்ற முடிவை அவர்கள் கொள்கை அடிப்படையில் எதிர்த்தனர். சட்டமன்ற நுழைவென்பது ரங்கராட்டினம் சுழல்வதைப் போல வேடிக்கையாக இருக்குமேயன்றி விடுதலைப் போராட்டத்துக்கு மக்களை ஒன்று திரட்டும் இயக்கமாக இருக்க முடியாதென மாற்றம் விரும்பாதோர் கருதினர். எனவே அவ்விருசாராரும் ஒத்துப்போவதற்கான வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

### சுயராஜ்யக் கட்சி

#### தோற்றம்

ஒத்துழையாமை இயக்கம் திடீரென விலக்கிக் கொள்ளப்பட்டதன் விளைவே சுயராஜ்யக் கட்சியாகும். அவ்வியக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபோது அலிப்பூர் சிறையிலிருந்த சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு போன்றோர் ஒத்துழையாமை நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட சூனியத்தை நிரப்புவதற்காகச் சட்டமன்ற நுழைவு பற்றி சிந்திக்கலாயினர். ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்திற்குள்ளிருந்து

கொண்டே நடத்தினாலென்ன என்று அவர்கள் எண்ணினர். 1922 ஜூலை மாதம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சி.ஆர்.தாஸ் சட்டமன்றங்களைக் கைப்பற்றுவது பற்றிய தனது எண்ணத்தை வெளியிட்டார். அவ்வாண்டு டிசம்பர் மாதம் கயாவில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் தனது தலைமை உரையில் தாஸ் அதுபற்றி தனது தீர்மானமான முடிவை வெளியிட்டார். ஆனால் தாசும், மோதிலால் நேருவும் சட்டமன்ற நுழைவுக்குச் சாதகமான ஆதரவைப் பெறமுடியவில்லை. எனவே கயா காங்கிரஸில் தோல்வியுற்ற அவர்கள் 1923 ஜனவரி முதல் நாளன்று சுயராஜ்ய கட்சியை தோற்றுவித்தனர். சித்தரஞ்சன் தாஸ் அக்கட்சியின் தலைவராகவும், மோதிலால் நேரு அதன் செயலராகவும் இருந்து செயல்பட்டனர்.

**நோக்கம்**

1924 ஆகஸ்டு 16, 17 தேதிகளில் கல்கத்தாவில் கூடிய சுயராஜ்யக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் அதன் அரசியல் அமைப்புத் திட்டம் தீர்மானிக்கப்பட்டது. அதில் தெளிவாக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியின் நோக்கங்களாவன:

1. எல்லாவித சட்டபூர்வமான சாத்வீக வழிகள் மூலமாகவும் இந்திய மக்கள் சுயராஜ்யத்தைப் பெறல்;

2. மத்திய, மாநில சட்டமன்றங்களில் அரசாங்கத்தின் சார்பில் கொண்டுவரப்படும் அனைத்து சட்டமுயற்சிகளையும் முறியடித்தல்;

3 உள்ளாட்சி சுயாட்சி பரவல்முறை; நிர்வாகம், மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் கட்டுப்பட்டிருத்தல் ஆகியவற்றுக்காகப் பாடுபடுதல்;

4. பொதுமக்களின் நலனுக்காகப் பாடுபடுதவதன்மூலம் அரசாங்க அதிகாரம் பாதிக்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்;

5. சமதர்மக் கொள்கைக்கும் சுதந்திரத் தனிமனித உணர்ச்சிக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்;

6. இந்தியாவின் இயல்பான சுயமரியாதையை வலியுறுத்தி நாட்டின் பெருமையை நிலைநாட்டல்.

**திட்டம்**

சுயராஜ்யக் கட்சியின் செயல் திட்டத்தை சட்டமன்றத்துக் குள்ளேயான பணிகள், சட்டமன்றத்துக்கு வெளியேயான பணிகள் என இருவகையாகப் பிரிக்கலாம். சட்டமன்றத்துள்ளே சுயராஜ்யக் கட்சி அரசாங்க வரவு-செலவுத் திட்டத்துக்கு அனுமதி வழங்காது; அரசாங்கம் கொண்டுவரும் சட்ட மசோதாக்களை நிராகரிக்கும்; எந்தவித அரசாங்கப் பதவிகளையும் ஏற்காது; தேசிய நலன்களைப் பற்றிய தீர்மானங்களைக் கொண்டுவரும், ஆதரிக்கும்; காங்கிரசின் நிர்மாணப் பணிகளுக்காக வாதாடும்; இந்தியாவின் வளம் விரையமாவதைத் தடுப்பதற்கான பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும்; நிலச்சுவான்தாரர்கள், குத்தகைதாரர்கள், முதலாளிகள் தொழிலாளிகள் ஆகியோரிடையே இணக்கமான தொடர்பை உருவாக்கப் பாடுபடும்.

சட்டமன்றத்துக்கு வெளியே சுயராஜ்யக் கட்சி இந்து முஸ்லீம்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை நீக்கல்; பல்வேறு சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தல்; பிராமணர்கள் பிராமணரல்லாதாரிடையே உள்ள பிணக்கைப் போக்கல்; தீண்டாமையைப் போக்கித் தாழ்த்தப்பட்டோரின் நிலையை உயர்த்தல்; கிராம நிறுவனங்களை ஏற்படுத்தல்; விவசாயிகளையும் ஆலைத் தொழிலாளர்களையும் அமைப்பினடிப்படையில் ஒன்று சேர்த்தல், காந்தியின் நிர்மாணத் திட்டத்தை செயல்படுத்தல், குறிப்பிட்ட பிரிட்டிஷ் பொருள்களைப் புறக்கணித்தல்; இந்தியாவின் நிலைகுறித்து வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்; ஆசிய நாடுகளின் இணையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

## சுயராஜ்யக் கட்சியினரின் சாதனைகள்

### தேர்தல் அறிக்கை

1923 அக்டோபர் 14ஆம் நாள் சுயராஜ்யக் கட்சி தனது தேர்தல் அறிக்கை (Election Manifesto ) யை வெளியிட்டது. அவ்வறிக்கையில் சுயராஜ்யக் கட்சி காங்கிரசின் அங்கமாகவே செயல்படும் என்பது தெளிவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கையும் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்ற பெயரால் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது போலித்தனமானது என்பதையும் அவ்வறிக்கை அம்பலப்படுத்தியது. மக்களின் துணைகொண்டு அந்நிய ஆட்சியை சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் அகற்றுவது என்ற தனது நோக்கத்தை வலியுறுத்தியது. அதிகாரம், அதிகாரவர்க்கத்திடமிருந்து மக்கள் கைக்கு மாற வேண்டும் என்றும் சட்டமன்றத்துக்குள் நுழைந்து அரசாங்கத்தை மக்களே கட்டுப்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தப் போவதாகவும் விவசாயிகள் தொழிலாளர்கள் ஆகியோரது நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சுயராஜ்யக் கட்சியின் தேர்தல் அறிக்கை கூறியது. அந்த அக்டோபர் அறிக்கை நல்ல விளைவுகளைத் தந்த, சிறந்த நடவடிக்கை என்று கூறியுள்ளார் ஜே.சி. ஜொஹாரி,

### தேர்தலில் வெற்றி

1923ல் நடைபெற்ற மத்திய, மாநில சட்ட மன்றங்களுக்கான பொதுத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி மாபெரும் வெற்றியைப் பெற்றது. மத்திய சட்டமன்றத்தில் அக்கட்சி 145 இடங்களைக் கைப்பற்றியது. மத்திய மாகாணத்தில் அதற்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைத்தது. வங்காள சட்டமன்றத்தில் அதுவே பெரிய கட்சியாகத் திகழ்ந்தது. பம்பாயில் நடந்த தேர்தலில் தங்களை எதிர்த்தோரையெல்லாம் சுயராஜ்யக் கட்சியினர் தோற்கடித்தனர். பீகார் சட்டமன்றத்தின் ஒரு இடம் தவிர பிற இடங்களையெல்லாம் சுயராஜ்யக் கட்சியே வென்றது. ஐக்கிய மாகாணத் தேர்தலிலும் அதே சாதனைதான். பஞ்சாப், ஒரிஸ்ஸா, சென்னை ஆகிய மாநிலங்களில் தான் அக்கட்சிக்குப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. சுயராஜ்யக் கட்சியின் அந்த அபரிமிதமான வெற்றி ஒத்துழையாமை இயக்கம் விலகிக் கொள்ளப்பட்டதால் ஏமாற்றமடைந்திருந்த மக்களிடையே எழுச்சியை

ஏற்படுத்தியது. தேசிய இயக்கத்தில் ஒரு சுறுசுறுப்பை உண்டாக்கியது சுயராஜ்யக் கட்சியின் சட்டமன்றப் பிரவேசம்.

**மத்திய சட்டமன்றத்தில்**

மத்திய சட்டமன்றத்தில் மோதிலால் நேரு சுயராஜ்யக் கட்சியின் தலைவராக இருந்து பாராளுமன்ற விதிகளின்படி செயல்பட்டார். எதிர்கட்சித் தலைவரான மோதிலால் நேரு கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் நன்கு பயன்படுத்திக் கொண்டு தேசத்தின் கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன்வைத்து, தேசவிரோத அரசாங்க நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்த்தார். ஏரவாடா சிறையில் நோயால் வாடிக் கொண்டிருந்த காந்தியை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார் மோதிலால் நேரு. அத்தீர்மானம் கொண்டுவரப்பட்ட அன்றே காந்தி விடுதலை செய்யப்பட்டார் (1926 பிப் 5). விசாரணைக் கைதிகளாக உள்ள கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்றும் நாடு கடத்தப்பட்டு வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் அனைவரும் தாயகம் திரும்புவதற்கு வழிசெய்ய வேண்டுமென்ற தீர்மானத்தையும் அவர் கொண்டு வந்தார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்கென ஒரு வட்டமேஜை மாநாட்டைக் கூட்ட வேண்டுமென மற்றொரு தீர்மானத்தின்மூலம் கேட்டுக் கொண்டார் மோதிலால் நேரு. பின்தங்கியோர் நல்வாழ்வுக்கான பல தீர்மானங்களை அவர் கொண்டு வந்தார். அதேசமயம் அரசாங்கச் செலவினக் கோரிக்கைகளை நிர்தாட்சண்யமாக நிராகரித்தார்.

அரசாங்க மசோதாக்கள் சுயராஜ்யக் கட்சியினர் கடுமையான கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாயின. இந்திய நிதி மசோதாவும், எஃகுத் தொழிற்சாலைப் பாதுகாப்பு மசோதாவும் எதிர்ப்புக்குள்ளாயின. இந்திய குற்றச் சட்டத்திருத்த மசோதாவும், நுழைவுச் சட்டத்திருத்த மசோதாவும், இந்தியத் தீர்வை மசோதாவும் நிராகரிக்கப்பட்டன. அதேபோன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள்மூலம் அரசாங்கத்தின் தேசவிரோதச் செயல்கள் சாடப்பட்டன. தேசத் தலைவர்களைக் கைது செய்தது, இங்கிலாந்தின் இன ஒதுக்கல் கொள்கை; ஐரோப்பியர், ஆங்கிலோ-இந்தியர் நடத்திய நிறுவனங்களுக்களிக்கப்பட்ட சலுகைகள், ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தி அடக்கல், பாராளுமன்ற நடைமுறைகள் மீறப்படுதல் ஆகியவை பற்றிய வினாக்களை எழுப்பியதன் மூலம் சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்தின் பல்வேறு குறைகளையும் மக்கள் அறியுமாறு செய்தனர்.

**மாநில சட்டமன்றங்களில்**

மாநில சட்டமன்றங்களிலும் சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்துக்கு தீராத தலைவலியாக இருந்தனர். மத்திய மாகாணத்தில் பி.எஸ்.மூஞ்சையும் பிறரும் இரட்டை ஆட்சி செயல்பட முடியாதவாறு செய்து விட்டனர். வங்காள சட்டமன்றத்தில் சி.ஆர். தாஸ் சுயராஜ்யக் கட்சியின் தலைவராக இருந்து அரசாங்கத்தை ஆட்டிப் படைத்தார். அங்கும் இரட்டை ஆட்சி முடக்கப்பட்டுவிட்டது. ஐக்கிய மாகாணத்தில் அக்கட்சி கட்டுப்பாட்டோடு செயல்பட்டது. பம்பாய் சட்டமன்றம் அரசாங்கக் கட்சி, சுயராஜ்ய எதிர்க்கட்சி,

அமைச்சர்கள் கட்சி ஆகிய மூன்று கட்சிகளிடையே சிக்கித் தவித்தது. சென்னை சட்டமன்றத்தில் எஸ். சத்தியமூர்த்தியின் தலைமையில் இயங்கிய சுயராஜ்யக் கட்சி ஆட்சி பீடத்திலிருந்த நீதிக் கட்சிக்குப் பெரிய சவாலாக இருந்தது. இரண்டாவது சட்டமன்றம் கூடியபோது (1923 டிச.23) நீதிக்கட்சிக்கெதிராக சி.ஆர்.ரெட்டி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சத்தியமூர்த்தி ஆரவாரத்தோடு ஆதரித்தார். மூன்றாவது சட்டமன்றத்துக்கான தேர்தலில் சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சியை விட அதிக இடங்களைக் கைப்பற்றினாலும்கூட கட்சிக் கட்டுப்பாட்டின்படி அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பை நிராகரித்தது. தீர்மானங்கள், ஒத்திவைப்புப் பிரேரணைகள், வெட்டுத் தீர்மானங்கள், அரசாங்கக் கோரிக்கைகளை நிராகரித்தல், வினாக்கள், வெளிநடப்பு போன்ற பல்வேறு பாராளுமன்ற முறைகளைப் பின்பற்றி சென்னை சட்டமன்றத்தில் சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கம் செயல்படுவதைத் தடைசெய்ய முயன்றனர். எனினும் சென்னையில் நீதிக்கட்சி அரசாங்கத்தோடு ஒத்துப் போனதால் இரட்டை ஆட்சி செயல்படுவதை சுயராஜ்யக் கட்சியால் நிறுத்த முடியவில்லை.

**சுயராஜ்யக் கட்சியின் சரிவு**

மூன்றாண்டு கால சட்டமன்ற நுழைவு முயற்சிக்குப்பின் சுயராஜ்யக் கட்சியினர் ஓய்ந்து போய்விட்டனர். அவசரமும், ஆத்திரமும், அனுபவமின்மையும் அவர்களை சட்டமன்ற நுழைவு முயற்சியில் தீவிரமாக ஈடுபடச் செய்தன. ஆனால் அனுபவம் அவர்களை அடங்கச் செய்தது. சட்டமன்றங்களில் அடிக்கடி அவர்கள் வெளிநடப்புச் செய்ததை அக்கட்சிக்காரர்களே பலர் குறை கூறினர். சுயராஜ்யக் கட்சியினர் ஏற்படுத்திய சட்டமன்றத் தடைகளையும்மீறி இரட்டை ஆட்சிமுறை செயல்பட்டுக் கொண்டுதான் இருந்தது. அக்கட்சியால் சட்ட மன்றத்துக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை வளைக்கவோ முறிக்கவோ முடியவில்லை. சூழ்நிலைகளின் கட்டாயத்தால் அவர்கள் தங்களது சட்டமன்ற நுழைவு பற்றிய கொள்கையை மறுபரிசீலனை செய்யத் துவங்கினர். தங்களது நிபந்தனையற்ற, விடாப்பிடியான அரசாங்க எதிர்ப்பைத் தளர்த்தத் துவங்கினர். தேசபந்து சித்தரஞ்சன் தாசின் மறைவுக்குப் பின்னர் (1925 ஜூன் 16) அந்த எதிர்ப்பும் மங்கி மறைந்தது.

சட்டமன்றத்துக்குப் போகும் எந்த சுயராஜ்யக் கட்சியினரும் அரசாங்கப் பதவியை ஏற்கக்கூடாதென்பது கட்சிக் கொள்கை. ஆனால் கட்சித் தலைவர்களே அக்கொள்கைக்குப் புறம்பாகச் செய்கின்றனர். மத்திய மாகாண சட்டமன்ற சுயராஜ்யக் கட்சித் தலைவரான எஸ்.பி. தம்பே கவர்னரின் ஆட்சிக் குழு உறுப்பினரானார். வி.ஜே.படேல் மத்திய சட்ட மன்றத்தின் சபாநாயகராக இருக்க ஒப்புக் கொண்டார். இராணுவத்தை இந்திய மயமாக்குவது பற்றிய பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஸ்கீன் குழு (Skeen Committee)வின் உறுப்பினராக இருக்க மோதிலால் நேரு சம்மதித்தார். சுயராஜ்யக் கட்சியினரிடையே இருந்த கருத்துவேறுபாடுகள் நாகபுரியில் கூடிய அக்கட்சியின் செயற்குழு கூட்டத்தில் (1925 நவ) கருத்துமோதலில் முடிந்தது. அதன் விளைவாக ஜெயகர், கேல்கர், முஞ்சே போன்றோர் கட்சியை விட்டுப் பிரிந்து வந்து இணக்கக் கட்சி (Responsivist Party) என்றும், லாலா லஜபதிராய் மதன்மோகன்

மாளவியா போன்றோர் தேசியக் கட்சி ( Nationalist Party ) என்று தனிக்கட்சிகள் அமைத்தனர். இவர்களையெல்லாம் மீண்டும் ஒன்று சேர்ப்பதற்காக சபர்மதியில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சி (1926 ஏப்ரல்) தோல்வியுற்றது. சுயராஜ்யக் கட்சி பிளவுபட்டதால் 1926ல் நடந்த சட்டமன்றத் தேர்தலிலும் அதன் பின்னர் அக்கட்சியால் நீடித்து நிலைக்க முடியவில்லை. மேலும் கௌகாத்தியில் கூடிய காங்கிரஸ் (1926) தனது சட்டமன்றப் புறக்கணிப்பினாலும் அரசாங்கப் பதவிகளை ஏற்பதில்லை என்ற முடிவிலும் உறுதியாக இருந்தது. அது சுயராஜ்யக் கட்சியை மேலும் பலவீனப்படுத்தியது. சிதறுண்ட சுயராஜ்யக் கட்சி இந்திய தேசிய அரசியலிலிருந்து படிப்படியாக மறைந்தது.

**மதிப்பீடு**

சுயராஜ்யக் கட்சி தேய்ந்து மறைந்தாலும் அது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பணி பாராட்டுதற்குரியது. ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டு மக்களது உள்ளங்களில் இருள் சூழ்ந்திருந்தபோது சுயராஜ்ய கட்சி நம்பிக்கை ஒளிவிளக்கை ஏற்றி வைத்தது. ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்துக்குள் கொண்டுசென்று தேசிய இயக்கத்துக்கு நல்ல தலைமையை வழங்கியது. தனது சட்டமன்ற நடவடிக்கைகளால் அரசாங்கத்தின் தேசவிரோத போக்கை மக்களுக்கு அடையாளம் காட்டியது அக்கட்சி. உள்ளாட்சி நிறுவனங்கள் சுயாட்சி பெறவும், பரவல்முறை நிர்வாகத்துக்கும், கல்விச் சீர்திருத்தத்துக்கும் பாடுபட்டது. உப்புவரி, புகைவண்டிக் கட்டணக் குறைப்பு, மாநில அரசாங்கங்கள் செலுத்த வேண்டிய தொகை குறைப்பு, துணித்தீர்வை விலக்கு, எஃகு, பேப்பர் தொழிற்சாலைகள் பாதுகாப்பு, மக்கள் உரிமைகள் பாதுகாப்பு, அரசியல் குற்றவாளிகளை விடுவித்தல் போன்ற தேசிய நலநடவடிக்கைகளை சுயராஜ்யக் கட்சி மேற்கொண்டது. அதன் தூண்டுதலால் இரட்டை ஆட்சி செயல்படும் முறையை விசாரிப்பதற்காக முடிமன் குழு ( Muddiman Committee ) அமைக்கப்பட்டு முடிவில் இரட்டை ஆட்சி முறையே கைவிடப்பட்டது. தேசியப் போராட்டத்துக்குக் கற்றோரின் ஆதரவு சுயராஜ்யக் கட்சிக்கும் அதன் மூலமாக காங்கிரசுக்கும் அதிக அளவில் கிடைத்தது. போராட்டத்தின் அடுத்த கட்டமான மாநில சுயாட்சி (Provincial Autonomy)கோரிக்கைக்கு நாட்டை தயார் செய்தது சுயராஜ்யக் கட்சிதான். இந்திய தேசிய இயக்கத்தில் தொய்வு விழுந்திருந்த நேரத்தில், மக்கள் நம்பிக்கை இழந்திருந்த சமயத்தில் சுயராஜ்யக் கட்சி மூன்றாண்டு காலத்துக்கு (1923-26) நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகப் பிரகாசித்தது. மக்கள் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் பெற்றனர். சட்டமன்றங்களுக்குள்ளே சலசலப்பை ஏற்படுத்தியதன் மூலம் சுயராஜ்யக் கட்சியினர் நாட்டு விடுதலைப் போராட்ட உணர்வை நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை உலராது காத்து வந்தனர். இவர்கள் சட்டமன்றத்துக்குச் செல்லாமல் ஒதுங்கியிருந்தால் மக்களிடையே ஏற்பட்டிருந்த சோர்வு அதிகரித்திருப்பதோடு அரசாங்கத்தின் கரத்தையும் பலப்படுத்தியிருக்கும் என காந்தியே சுயராஜ்யக் கட்சியினரின் சாதனைக்கு புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். சைமன் குழு (Simon Commission) அமைக்கப்படுவதற்கு சுயராஜ்யக் கட்சி உடனடியான காரணமாக இருந்தது.

# 23. சட்டமறுப்பு இயக்கம், 1930-1934

> நாம் நமது கோட்பாட்டில் உறுதியாகவும், தீர்மானத்தில் திடமாகவும் இருப்போம். சத்தியாக்கிரகத்தை நடத்தும்போது தற்காலிகப் பின்னடைவு ஏற்படலாம்; ஆனால் அது தோல்வி அல்ல. தோல்வியே ஏற்படினும் அதுவே பெரிய வெற்றியாகும்.
>
> - ராஜேந்திர பிரசாத்.

ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பின்னர் சட்டமறுப்பு இயக்கத்தை (Civil Disobedience Movement) துவக்குவதற்கான சூழ்நிலை உருவாயிற்று. லாகூர் காங்கிரஸ் (1929) பூரண சுயராஜ்யத்துக்காகப் போராடுவதெனத் தீர்மானித்தது. இங்கிலாந்தில் புதிதாகப் பதவிக்கு வந்த தொழிற்கட்சி அரசாங்கமும் இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை தலைவர்களுக்கு ஏற்படவில்லை. மக்கள் அரசாங்கத்தின் அடக்குமுறையை வெறுத்தனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் பிறரும் விஷம்போல் ஏறிய விலைவாசியால் பெரிதும் அவதியுற்றனர். காந்தியின் கட்டளையின்றியே விவசாயிகள் வரிகொடா இயக்கத்தைத் துவக்கி விடுவதற்கான வாய்ப்பிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் ஜே.பி.கிருபளானி. தொழிலாளர் இயக்கம் தீவிரமடையத் துவங்கியது. இளைஞர்கள் பொறுமையிழந்து வன்முறைச் செயல்களில் ஈடுபடத் துவங்கனர். லாகூர் காங்கிரசில் தீர்மானித்தபடி 1930 ஜனவரி 26ஆம் நாள் நாடெங்கிலும் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. அதனால் ஊக்கம்பெற்ற காந்தி தனது 11 அம்சக் கோரிக்கையை வெளியிட்டார். அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் மாற்றத்தை வேண்டிய காந்தியின் அக்கோரிக்கைக்கு வைசிராய் இர்வின் பிரபு செவிமடுக்காமையால் இறுதிவரை போராட (Fight to the finish) முடிவு செய்தார்.

## உப்புச் சத்தியாக்கிரகம்

காங்கிரஸ் செயற்குழு சபர்மதி ஆசிரமத்தில் கூடியது (1930 பிப்ரவரி 14-16). அக்கூட்டத்தில் சட்டமறுப்பு இயக்கத்தைத் தலைமையேற்று நடத்துவதற்கான முழு அதிகாரமும் காந்திக்கு கொடுக்கப்பட்டது. காந்தி உப்புச் சட்டத்தை (Salt Tax) மீறிச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தப்போவதாக அறிவித்தார். அடித்தட்டு மக்களின் அடிவயிற்றைத் தொட்ட உப்பு வரி எதிர்ப்பை ஆயுதமாகக் கொண்டு ஆங்கிலேய அரசுடன் மோதத் துணிந்த காந்தியை அப்போது பலரும் எள்ளி நகையாடினர். கோலியாத்தை எதிர்க்க வந்த டேவிட் போலக் காட்சியளித்தார் காந்தி. மார்ட்டின் லூதரின் மறுப்பை மதிக்காத பழங்காலப் போப்பாண்டவரைப் போன்று காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்தையும் தேசீய்க்

கிண்ணத்தில் எழுந்த புயல் (Storm in a Tea Cup) எனக் கருதினார் வைசிராய் இர்வின் பிரபு. அதிகாரவர்க்கம் அதை கிண்டர் கார்டன் கிளர்ச்சியாகக் கருதியது. ஒரு கோப்பையில் கடல் நீரைக் காய்ச்சுவதால் பிரிட்டிஷ் பேரரசைப் பதவியிறக்கம் செய்ய முடியாது எனக் கேலி பேசினர். அரைப் பைத்தியத்தின் கற்பனைப் போராட்டமே இது என்று அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் உதாசீனப்படுத்தினர். காங்கிரஸ் தலைவர்களில் பலரும் உப்புக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் என்ன தொடர்பு எனக் கேட்டனர். உண்ணாவிரதம், சர்க்கா போன்று இதுவும் காந்திக்கு ஒரு ஓய்வு நேர விளையாட்டு என்றே மோதிலால் நேரு கருதினார்!

## தண்டி யாத்திரை

ஆனால் காந்தி அப்படி நினைக்கவில்லை. உப்புச் சத்தியாக்கிரகத்தை மிகவும் வலிமைவாய்ந்த அறப்போர் ஆயுதமாகக் கருதினார். முன்னமேயே அறிவித்தவாறு 1930 மார்ச் 12ஆம் நாள் 78 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரமச் சீடர்களுடன் சபர்மதியிலிருந்து 385 கிலோ மீட்டர் தொலைவிலிருந்த தண்டிக்குப் பாதயாத்திரையாகப் புறப்பட்டார் காந்தி. அந்தச் சத்தியாக்கிரக யாத்ரிகர் செல்லும்போது அவரது பாதம்பட்ட இடத்திலெல்லாம் போராட்டப் பொறி உண்டாயிற்று எனக் கூறியுள்ளார் ஜவஹர்லால் நேரு. காந்தி மேற்கொண்டது வெறும் பாதயாத்திரை மட்டுமல்ல; அது ஒரு பெரும் போராட்டப் பயணம் என்பது போகப் போகத்தான் தெளிவாயிற்று. தம்புராவே போர் முரசாகவும், பக்திப் பாடலே யுத்த கீதமாகவும் இருந்ததென்று கூறியுள்ளார் ஜே.பி.கிருபளானி. காந்தி கடந்து சென்ற கிராமங்களிலெல்லாம் அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. நாளுக்குநாள் காந்தியின் பின்னால் சென்ற கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது. கிராம அதிகாரிகள் வேலையைவிட்டு விலகிப் போராட்டத்தில் ஈடுபடலாயினர். 24 நாட்கள் நடைப் பயணத்துக்குப் பின்னர் ஏப்ரல் 5ஆம் நாள் காலை காந்தி தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் காலை பிரார்த்தனைக்குப் பிறகு உப்பை அள்ளி உப்புச் சட்டத்தைமீறி சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். அவர் விடுத்த அறிக்கையில் ஏப்ரல் 13ஆம் நாள் வரையுள்ள காலத்தை தேசிய வாரமாகக் கொண்டாட வேண்டுமென்றும் அப்போது உப்புச் சத்தியாக்கிரகத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அப்படி அதில் கலந்து கொள்ள முடியாதவர்கள் விதேசித் துணிப் புறக்கணிப்பு, கதரைப் பயன்படுத்தல் பற்றிய பிரச்சாரப் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## மக்கள் இயக்கம்

காந்தி மேற்கொண்ட தண்டி யாத்திரை மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. உப்பு வரிச் சட்டத்தை மீறல், அரசாங்கப் பணிகளிலிருந்தும், கல்விக் கூடங்களிலிருந்தும் விலகல், மதுக்கடை மறியல், விதேசித்துணிப் புறக்கணிப்பு, கதர்ப் பிரச்சாரம், வரி கொடாமை ஆகிய பல்வேறு முறைகளில் சட்டமறுப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. பம்பாய் மக்கள் உப்புக் காய்ச்சியதோடு நில்லாது உப்பை வரியின்றி விற்றனர். உப்பு கிடங்குகளைத் தாக்கினர். பீகாரில் வனச்சட்டங்கள் மீறப்பட்டன. விதேசித் துணி புறக்கணிக்கப்பட்டது. கள்ளுக்கடைகள் மறியல் செய்யப்பட்டன.

வங்காளத்திலும், குஜராத்திலும் வரிகொடா இயக்கம் துவக்கப்பட்டது. மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும் வீதிகளில் உப்பு விற்றுச் சட்டத்தை மீறினர்.

தமிழ்நாட்டில் சி. ராஜகோபாலாச்சாரியும் நூறு தொண்டர்களும் திருச்சியிலிருந்து வேதாரண்யத்துக்குப் பாதயாத்திரையாகச் சென்று இரண்டு நாள் முகாமிட்டு உப்பு வரிச் சட்டத்தை மீறினர் (1930 ஏப்ரல் 13-28). இவர்கள் வேதாரணயம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் டி.பிரகாசமும், கே.நாகேஸ்வரராவும் மெரீனா கடற்கரையில் உப்புக் காய்ச்சினர். சி.ராஜகோபாலாச்சாரி கைது செய்யப்பட்டார். பிரகாசத்துக்கும், நாகேஸ்வரராவுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. அதைக் கட்ட மறுத்ததால் அவர்களுடைய கார்கள் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டன!. அச்செயலைப் பத்திரிகைகள் பலமாகக் கண்டித்தன. அர்த்தால் அனுசரிக்கப்பட்டது (ஏப்ரல் 22). பெண்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் போலீசின் தடியடிப் பிரயோகத்துக்கு ஆளாயினர். கடற்கரையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் (ஏப்ரல் 27) ஆயுதம் தாங்கிய போலீசாரால் கலைக்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் இறந்தனர்; ஐவர் படுகாயமுற்றனர். அனைத்துக் கட்சிகளும் போலீஸ் அத்துமீறலைக் கண்டித்தன. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் அடங்கிய தூதுக்குழு ஊட்டிக்குச் சென்று கவர்னரிடம் கண்டன மனுவைச் சமர்ப்பித்தது. துப்பாக்கிச் சூடு பற்றி விசாரித்த சென்னை மகாஜன சபை வன்முறைக்குக் காரணம் போலீசாரே என்ற முடிவுக்கு வந்தது. சென்னை நகராட்சி மன்றம் கட்சி வேறுபாடின்றித் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியது. இவ்வாறு உப்புச் சத்தியாக்கிரகம் மக்கள் இயக்கமாக விரிவடைந்தது.

**அர்த்தால்**

உப்புச் சத்தியாக்கிரகம் உப்புசப்பற்ற கிளர்ச்சியாகி விடும் என்ற எதிர்பார்த்த அரசாங்கம் போராட்டம் தீவிரமடைந்ததைக் கண்டு கலவரமடைந்தது. அடக்குமுறையில் போராட்டத்தை ஒடுக்க முற்பட்டது. 1930 மே 4ஆம் நாள் நள்ளிரவில் காந்தி கைது செய்யப்பட்டு புனாவிலுள்ள எரவாடா சிறையிலடைக்கப்பட்டார். காந்தி கைது செய்யப்பட்டதை அறிந்த மக்கள் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடலாயினர். பம்பாயில் முழு அர்த்தால் அனுசரிக்கப்பட்டது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து போராட்டத்தில் கலந்து கொண்டதால் 40 மில்கள் மூடப்பட்டன. பூனாவில் அர்த்தால் முழுவெற்றி பெற்றது. ஷோலாப்பூரில் போலீஸ் நிலையம் கொளுத்தப்பட்டதை அடுத்து நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் இறந்தனர். நூறு பேருக்கு மேல் காயமுற்றனர். கல்கத்தாவில் ஏற்பட்ட கலவரம் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. காந்தி கைது செய்யப்பட்டபின் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமையேற்ற அப்பாஸ் தியாப்ஜி கைது செய்யப்பட்டார். சூரத் மாவட்டத்திலுள்ள தர்சனா (Dharsana) என்ற இடத்திலிருந்த அரசாங்க உப்பு மண்டியை சரோஜினி நாயுடுவின் தலைமையில் தொண்டர்கள் தாக்கினார்கள் சரோஜினி கைது செய்யப்பட்டார். தொண்டர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். கர்னாடகத்தில் சானிகட்டா என்ற

இடத்திலிருந்த உப்பு மண்டியைப் பெரிய கூட்டமொன்று தாக்கியது. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கபார்கான் தலைமையில் சாத்வீக ஆர்ப்பாட்டம் செய்த சத்தியாக்கிரகிகளை போலீசார் தொடர்ந்து சுட்டனர். ஒரு கட்டத்தில் கார்வால் இராணுவப் பிரிவினர் நிராயுதபாணியரான அகிம்சைத் தொண்டர்களைச் சுட மறுத்துவிட்டனர்! கான் கைது செய்யப்பட்டார்.

**விதேசித் துணிப் புறக்கணிப்பு**

சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு அம்சமான விதேசித்துணிப் புறக்கணிப்பு சில இடங்களில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. பம்பாயில் இப்புறக்கணிப்பு மக்களின் பேராதரவைப் பெற்றது. தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் நெசவாளர்கள் விதேசித் துணிக்கடைகளுக்கு முன் மறியல் செய்தனர். சேலத்தில் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வீடுவீடாகச் சென்று விதேசித் துணிக்கெதிராகப் பிரச்சாரம் செய்தனர். கோயமுத்தூரில் நெசவாளர்கள் விதேசித் துணிக்கடைகளையும், கள்ளுக் கடைகளையும் மறியல் செய்தனர். குடியாத்தத்தில் நெசவாளர்கள் பெருங்கூட்டமாகச் சென்று போலீசாரைத் தாக்கி, மாஜிஸ்ரேட் அலுவலகத்தில் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். மதுரையில் சௌராஷ்டிரா மக்களின் தனிப் பெருந்தலைவராகத் திகழ்ந்த என்.எம்.ஆர்.சுப்பராமன் விதேசித் துணிப் புறக்கணிப்பை வெற்றிகரமாகச் செய்தார். அவர் கைது செய்யப்பட்ட பின்னரும் 2,000 நெசவாளர்கள் கள்ளுக்கடை மறியல் செய்தனர். இப்புறக்கணிப்பு தமிழ்நாட்டில் சென்னை, சேலம், வேலூர், மதுரை, வேதாரண்யம், ஆந்திரா பகுதியில் ராஜமகேந்திரவரம், பெர்ஹாம்பூர், காக்கினாடா, எல்லூர், கேரளாவில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை, கர்நாடகப் பகுதியில் மங்களூர், பெல்லாரி, உடுப்பி ஆகிய இடங்களில் தீவிரமாகவும் நடைபெற்றது.

**வரிகொடாக் கிளர்ச்சி**

குஜராத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் வரிகொடா கிளர்ச்சி உத்வேகத்துடன் நடத்தப்பட்டது. 1928ல் வல்லபாய் படேல் பர்தோலியில் வரிகொடா இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திய பின்னர் அப்போராட்டம் சட்டமறுப்பு இயக்கத்தின்போது பிற மாவட்டங்களுக்கும் பரவியது. அகமதாபாத், கெட்டா, புரோச், சூரத் ஆகிய இடங்கள் வரிகொடா கிளர்ச்சிக் கேந்திரங்களாகத் திகழ்ந்தன. அக்கிளர்ச்சியை அடக்க அரசாங்கம் அடக்குமுறையைக் கையாண்டது. விவசாயிகளிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டன. கிளர்ச்சியில் ஈடுபட்டோர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஐக்கிய மாகாணத்தில் வரிகொடுக்க மறுத்த ஜமீன்தார்களும், விவசாயிகளும் அரசாங்கத்தால் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ரேபரேலியில் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த ஜமீன்தார்கள் விவசாயிகளால் தாக்கப்பட்டனர். மத்திய மாகாணத்தில் வரி குறைப்புக் கிளர்ச்சியும் வனச்சட்ட மீறலும் நிகழ்ந்தன. சென்னை ராஜதானியில் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய ஆந்திர மாவட்டங்களில் மட்டுமே வரிகொடா கிளர்ச்சி நடைபெற்றது.

**மதிப்பீடு**

காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். குறிப்பாக காந்தி மேற்கொண்ட தண்டி யாத்திரை இந்தியாவின் இதயத்தையே தொட்டது எனலாம். இந்தியாவே அடித்தளத்திலிருந்து

கிளர்ந்தெழுந்தது எனக் குறிப்பிட்டுள்ளார் கே.எம்.முன்ஷி. எல்பா சிறையிலிருந்து வந்த நெப்போலியன் பாரீசுக்குச் சென்றது போல, முஸோலினி ரோமுக்குச் சென்றதுபோல இருந்தது காந்தி சபர்மதியிலிருந்து தண்டிக்குச் சென்றது என ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் ஜே.எம். பிரௌன். உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது உப்பு வரிச் சட்டத்தைமீறி 70,000 பேர் சிறைச்சாலைகளுக்குச் சென்றனர். தமிழ்நாடு, பம்பாய், ஐக்கிய மாகாணம் ஆகிய இடங்களில் இப்போராட்டம் அமோக வெற்றியைப் பெற்றது. இப்போராட்டத்தின்போது காந்தியின் நிர்மாணத் திட்டம் மிகுந்த ஊக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது. விதேசித் துணிப் புறக்கணிப்பு கள்ளுக்கடை மறியல், வரிகொடாக் கிளர்ச்சி ஆகியவை போராட்டத்தைக் கிராமங்களுக்கெல்லாம் கொண்டு சென்றன. பல திட்டங்கள் இருந்தமையால் தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும் சட்டமறுப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

சட்டமறுப்பு இயக்கம், குறிப்பாக உப்புச் சத்தியாக்கிரகம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வங்காளத்தில் சுபாஷ் சந்திர போஸ் கோஷ்டிக்கும், சென்குப்தா கோஷ்டிக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தமையால் இயக்கம் பலவீனப்பட்டது. வங்காள முஸ்லீம்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் இவ்வியக்கத்திலிருந்து ஒதுங்கியே இருந்தனர். உப்பு மண்டித் தாக்குதல்களும் அதனால் ஏற்பட்ட போலீசாரின் தடியடிப் பிரயோகமும் துப்பாக்கிச் சூடும் உப்புச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு பரவ விடாமல் செய்துவிட்டன. வரிகொடாக் கிளர்ச்சி குஜராத் ஐக்கிய மாகாணத்தில் இருந்தது போன்று பிற இடங்களில் இல்லை. தமிழ்நாட்டில் இதற்கு ஆதரவே இல்லாமல் போனது விந்தையே. பீஹாரில் வரிகொடா கிளர்ச்சி செய்த தலக் காங்கிரஸ் தலைவர்கள் அனுமதி கொடுக்கவில்லை; சில இடங்களில் சட்ட மறுப்பு இயக்க விதிகள் மீறப்பட்டன. கட்டாக், மத்திய மாகாணத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் பள்ளிகளையும், கல்லூரிகளையும் மறியல் செய்ததோடு பொது சொத்துக்களையும் அழித்தனர். அரசாங்க ஊழியர்களின் குடும்பங்கள் பல தொல்லைகளுக்குள்ளாயின. மறியலின்போது பல பெண்களும் பாமர மக்களும் போலீசாரின் வன்முறைத் தாக்குதல்களுக்கு இலக்காக நேரிட்டது. அரசாங்கத்தின் அடக்குமுறையால் சட்டமறுப்பியக்கத் தொண்டர்கள் பலமிழந்தனர். அதேசமயம் அடக்குமுறையால் மட்டும் இயக்கத்தை ஒடுக்க முடியாதென்பதை அரசாங்கமும் உணர்ந்தது.

### வட்டமேசை மாநாடுகள்

### முதல்வட்டமேசை மாநாடு, 1930

சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே முதல் வட்டமேஜை மாநாடு (Round Table Conference) லண்டனில் 1930 நவம்பர் 12 முதல் 1931 ஜனவரி 19 வரை நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொள்ள காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் மறுத்து விட்டனர். எனினும் பிரிட்டிஷ் இந்தியா, மன்னர் மாநிலங்கள், இங்கிலாந்தின் அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் 89 பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர். பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே

மக்டொனால்டு (Ramsay Macdonald) அம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். இந்தியக் கூட்டாட்சி; கூட்டாட்சியின் ஆட்சித் துறை; சட்டத் துறை; அதிகாரப் பொறுப்பாக்கல்; பொறுப்பாட்சியின் அடிப்படையில் மாநில அரசாங்கங்களைத் திருத்தி அமைத்தல் ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டன. கூட்டாட்சி (Federation) பற்றி ஒருமித்த கருத்து ஏற்பட்டது. ஆனால் சிறுபான்மை வகுப்புவாதப் பிரச்னை பற்றிக் கருத்து மாறுபாடுகள் தோன்றின. மேலும் காங்கிரசின் கருத்தறியாமல் எவ்வித முடிவையும் மேற்கொள்ள முடியவில்லை. எனவே முதல் வட்டமேஜை மாநாடு ஒத்திப் போடப்பட்டது.

**காந்தி இர்வின் ஒப்பந்தம்**

வட்டமேஜை மாநாடு மூலம் இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிப்பது என்ற ஆங்கிலேயரின் கண்துடைப்பு முயற்சியைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் பிரிட்டிஷ் பிரதமர் மக்டோனால்டின் கொள்கை விளக்கமும் தெளிவில்லாமல் இருந்தது. எனவே, காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தைத் தீவிரமாகத் தொடர்ந்து நடத்துமாறு மக்களைக் கேட்டுக் கொண்டது. காங்கிரஸ் தலைவர்களெல்லாம் சிறைக்கூடங்களில் இருந்தபோதும் போராட்டத்தைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள் ஆர்வத்துடனும் வேகத்துடனும் மேற்கொள்ளப்பட்டன. நிலைமையின் தீரத்தை உணர்ந்த வைசிராய் இர்வின் பிரபு காந்தியும் பிற காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்படுவர் என்று அறிவித்தார் (1931 ஜுன் 25). அவ்வறிப்பின்படி காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர். காங்கிரஸ்மீது விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. சாப்ரூ, ஜெயகர், சீனிவாச சாஸ்திரி ஆகியோரின் சமரச முயற்சியால் காந்தி வைசிராய் இர்வின் பிரபுவை சந்திக்கச் சம்மதித்தார். அவ்விருவரின் சந்திப்புக்கள் 1931 பிப்ரவரி 17 லிருந்து மார்ச் 5 வரை தொடர்ந்தன. அச்சந்திப்புக்களின் விளைவாகக் காந்திக்கும் இர்வினுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. அதுவே காந்தி-இர்வின் ஒப்பந்தம் (Gandhi Irwin Pact ) என்றழைக்கப்படுகிறது.

காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் காணப்பட்ட முக்கிய விதிகளாவன:

1. அரசியல் சட்ட சீர்திருத்தங்கள் பற்றி எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படும்;

2. வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்;

3. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்படும்;

4. சுதேசித் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதால் விதேசிப் பொருள் புறக்கணிப்பு கைவிடப்படும்;

5. கள்ளுக்கடை மறியல் அமைதியாக நடைபெறும்;

6. போலீஸ் அத்துமீறல் பற்றிய விசாரணை வலியுறுத்தப்பட மாட்டாது;

7. சட்டமறுப்பு இயக்கம்பற்றி அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள் அனைத்தும் விலக்கிக் கொள்ளப்படும்;

8. குற்றச்சட்டத் திருத்தச் சட்டம் கைவிடப்படும்;

9. அரசியல் வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படும்;

10. சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுதலை செய்யப்படுவர்;

11. அபராதத் தொகை வசூலிக்கப்பட மாட்டாது;

12. ஆர்ப்பாட்டக்காரர்களை தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்ட போலீசார் விலக்கிக் கொள்ளப்படுவர்;

13. கைப்பற்றப்பட்ட நகரும் சொத்துக்களும் திருப்பியளிக்கப்படும்;

14. பிற நகராட்சி சொத்துக்களும் திரும்ப வழங்கப்படும்;

15. பதவியைத் துறந்தோர் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்;

16. உப்பு வரிச்சட்டம் விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் கடலோரப்பகுதி மக்கள் வீட்டுத் தேவைக்கான உப்பை உற்பத்தி செய்து கொள்ளலாம்;

17. இந்த ஒப்பந்தத்தைக் காங்கிரஸ் கடைபிடிக்கத் தவறினால் பொது மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கலாம்.

காந்தி-இர்வின் ஒப்பந்தம் பரஸ்பர நம்பிக்கையின்மீது செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்பாடாகும். முதன்முறையாக ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசைத் தனக்குச் சமமாக மதித்து, அதன் பிரதிநிதியான காந்தியுடன் செய்து கொண்ட சமரச உடன்படிக்கையாகும். இந்தியாவின் சார்பாகப் பேசக்கூடிய அந்தஸ்தையும், அதிகாரத்தையும் அரசு காங்கிரசுக்கு இவ்வுடன்படிக்கையின்மூலம் வழங்கியதென்றும், வருங்காலப் பேச்சுவார்த்தைகளிலும் தனது கருத்துக்களைக் கூறுவதற்கான உரிமையும் காங்கிரசுக்கிருப்பதை ஒத்துக் கொண்டது என்றும் ஆர்.சி. மஜூம்தார் குறிப்பிட்டுள்ளார். இவ்வுடன்படிக்கை காந்திக்கு கிடைத்த வெற்றி என்று பலரும் கூறினர். ஆனால் காந்தியோ இது இருவருக்கும் கிடைத்த வெற்றி என்றார். இந்திய அரசியல் சட்ட வளர்ச்சி வரலாற்றில் இவ்வொப்பந்தம் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக அரசாங்க அடக்குமுறை தற்காலிகமாக நின்றது. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் போராடுவதற்கான புதுப்பலம் பெற்றது. காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்துக்குப் பரவலான வரவேற்பு இருந்தபோதிலும் ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்றவர்கள் இவ்வுடன்பாட்டால் இந்தியாவின்மீது இங்கிலாந்துக்கிருந்த கட்டுப்பாடு எவ்வகையிலும் குறையவில்லை என்று குறை கூறினர். பகத்சிங் மற்றும் அவரது கூட்டாளிகள் மீது விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையைக் குறைக்க இந்த ஒப்பந்தம் வழி செய்யவில்லை என்று கூறப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தின்போது

நடைபெற்ற போலீஸ் இராணுவ அத்துமீறல்களைப் பற்றிய விசாரணையை வலியுறுத்தத் தவறிவிட்டார் காந்தி என்பதில் பலருக்கு வருத்தமேற்பட்டது. இந்தச் சமரச முயற்சியில் காந்தி அதிகமாகவே விட்டுக் கொடுத்துவிட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார் ஜே.பி. கிருபளானி. காங்கிரஸ்காரர்கள் தங்களது மனதுக்குள் இந்த ஒப்பந்தத்தை எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை எனக் கூறியுள்ளார் சி.ஒய். சிந்தாமணி. இருப்பினும் கராச்சியில் கூடிய காங்கிரஸ் (1931 மார்ச்) காந்தி-இர்வி.: ஒப்பந்தத்தை அங்கீகரித்தது. அதுமட்டுமல்ல, காந்தியைத் தனது ஏகப்பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பி வைத்தது காங்கிரஸ்.

**இரண்டாவது வட்டமேஜை மாநாடு, 1931**

இரண்டாவது வட்ட மேஜை மாநாடு 1931 செப்டம்பர் 7 லிருந்து டிசம்பர் 7 வரை நடைபெற்றது. மாநாடு துவங்கி ஐந்து நாட்களுக்குப் பிறகு (செப்.12) காந்தி கலந்து கொண்டார். மொத்தம் 107 பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பங்கேற்றனர். பிரிட்டிஷ் பிரதமர் தலைமையேற்றார். இந்தியாவின் வருங்கால அரசியல் சட்ட அமைப்பும் சிறுபான்மையினரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பிரதானமாக விவாதிக்கப்பட்டன. இவ்விரண்டில் வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி விவாதிப்பதிலேயே பெரும்பான்மையான பிரதிநிதிகள் ஆர்வத்துடன் இருந்தனர். இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்குவதற்குமுன் சிறுபான்மையினரின் வகுப்புவாத பிரச்னை தீர்க்கப்பட்டாக வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் காந்தி அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறாத வரை வகுப்புவாதப் பிரச்னை தீராது எனக் காந்தி வாதிட்டார். 'தீண்டத்தகாதோர்' எனக் கருதப்பட்டோருக்கும் தனித்தொகுதி வழங்கப்படுவதைப் பற்றிய பிரிட்டிஷ் அரசின் திட்டம் வகுப்புவாதப் பிரச்னையை மேலும் சிக்கலுடைய தாக்கிற்று. அப்படியாயின் தீண்டாமை நிரந்தரமாக்கப்பட்டுவிடும் என்று கருதிய காந்தி அத்திட்டத்தை அடியோடு எதிர்த்தார். ஆனால் அம்பேத்காரும், ஜின்னாவும் தனித்தொகுதித் திட்டத்தை ஆதரித்தனர். இந்தியத் தலைவர்களுக்கிடையே இதுபற்றிய கருத்துடன்பாடு இன்மையால் சிறுபான்மையினருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்புகள் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கமே முடிவு செய்யும் என்று அறிவித்தார் பிரதமர் ராம்சே மாக்டொனால்டு. அதன் விளைவே வகுப்புத் தீர்வு (Communal Award) ஆகும். தனது மகத்தான முயற்சியில் தோல்விகண்ட காந்தி, தோல்வியை ஏற்றுக்கொண்டு வெறுங்கையோடு இந்தியா திரும்பினார் (1931 செப். 28). காந்தியின் தோல்வியை மகத்துவமான தோல்வி (Magnificent failure) என்று வர்ணித்துள்ளார் சி.எப்.ஆன்ட்ரூஸ் (C.F. Andrews).

முதல் வட்டமேஜை மாநாட்டைவிட, இரண்டாவது வட்டமேஜை மாநாடு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. அம்மாநாடு துவங்கியபோது முற்போக்கு தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு பதில் பிற்போக்கு டோரி கட்சி ஆட்சியில் இருந்தது. புதிதாக நியமிக்கப்பட்ட வைசிராய் விலிங்டன் பிரபு காங்கிரசை ஒடுக்கி, காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை உதாசினப்படுத்தினார். அதேபோன்று இந்திய விவகாரச் செயலர் சாமுவேல் ஹோர் வகுப்புப் பிரச்னை

(Communal Problem) யை மேலும் சிக்கலாக்கினார். காந்தி மட்டும் காங்கிரசின் தனிப்பிரதிநிதியாகக் கலந்து கொண்டதால் அவருக்கும் பிரதிநிதித்துவ பலம் இல்லாமல் போய்விட்டது. இம்மாநாட்டில் முதல் பெண்மணியாகக் கலந்துகொண்ட சரோஜினி நாயுடுவும், மாளவியாவும் வைசிராயின் நியமன உறுப்பினர்கள். தனிப்பிரதிநிதியாகக் கலந்து கொண்டது காந்தி செய்த தவறு என்று குறிப்பிட்டுள்ளார் சி.ஒய்.சிந்தாமணி. முதல் மாநாட்டின் முடிவில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்; போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் இரண்டாவது மாநாட்டுக்குப்பின் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் துவக்கப்பட்டு; மேலும் கடுமையாக ஒடுக்கப்பட்டது!

**மீண்டும் போராட்டம்**

இர்வின் பிரபுவுக்குப் பின் வைசிராயாக வந்த விலிங்டன் பிரபு ( Lord Willington, 1931-36 ) காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைக் கைவிட்டார். அடக்குமுறையைக் கையாண்டார். ஐக்கிய மாகாணத்தில் வரிகொடாக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நேரு, ஷெர்வானி, புருஷோத்தம்தாஸ், தாண்டன் போன்றோர் கைது செய்யப்பட்டனர். வங்காளத்தில் சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் கடுமையாக அடக்கப்பட்டன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான்அப்துல் கபார்கான் கமிஷனர் நடத்திய தர்பாரில் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக கைது செய்யப்பட்டார்! அதை எதிர்தது ஆர்ப்பாட்டம் செய்த அவரது தொண்டர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். ஈவிரக்கமின்றிச் சுடப்பட்டனர். இவையாவும் காந்தி லண்டனில் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டிருந்தபோது நிகழ்ந்தவையாகும்.

காந்தி இந்தியா திரும்பியவுடன் *(1931 டிசம்பர் 28)* இந்தியாவில் நடந்த அத்துமீறல்கள் பற்றி அறிந்தார். அவர் வைசிராயைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. வைசிராய் காந்தியை சந்திக்க விரும்பவில்லை. எனவே, காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் துவக்கத் தீர்மானித்தார். *1932* ஜனவரி 3ஆம் நாள் போராட்டம் திரும்பவும் துவக்கப்பட்டது. அரசாங்கம் நான்கு நெருக்கடிச் சட்டங்களைப் பிறப்பித்துப் போராட்டத்தை அடக்கத் துணிந்தது. போராட்டம் புதுப்பிக்கப்பட்ட மறுநாளே (ஜன. 4) காந்தி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையிலடைக்கப்பட்டார். காங்கிரஸ் சட்ட விரோதமான அமைப்பு என்று அறிவிக்கப்பட்டது. கஸ்தூரிபாயும் கைது செய்யப்பட்டார்! அலகாபாத்தில் ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஜவஹர்லால் நேருவின் தாயார் சொருபராணி போலீசாரால் தாக்கப்பட்டு தலையில் காயமுற்றார். காங்கிரசின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. காங்கிரஸ்காரர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன அல்லது கைப்பற்றப்பட்டன. சென்னை ரட்டன் கடைத் தெருவில் (Rattan Bazaar) அமைதியாக அந்நியத் துணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த திருமதி ருக்மணி லட்சுமிபதி போலீசாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கூட்டம் போலீசாரால் கலைக்கப்பட்டது. கூட்டத்துக்குத் தலைமை வகித்த திருமதி நெல்லி சென்குப்தா கைது செய்யப்பட்டு ஆறு மாதச் சிறைத்தண்டனை பெற்றார். பல பிரதிநிதிகளும் கைது செய்யப்பட்டனர். போராட்டம் துவங்கிய ஆறு மாதங்களில் 1,20,000

பேர் கைதானார்கள்! அரசாங்கத்தின் அரக்கத்தனமான அடக்குமுறையையும்மீறி மக்கள் சட்ட மறுப்புப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டனர்.

**வகுப்புவாரித் தீர்வு**

இந்தியாவில் சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு தனது வகுப்புவாரித் தீர்வை (Communal Award) 1932 ஆகஸ்டு 17 ஆம் நாள் அறிவித்தார். இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றி இந்தியத் தலைவர்கள் ஒருமுடிவுக்கு வரமுடியாமையால் பிரிட்டிஷ் பிரதமர் தன்னிச்சையாக இத்தீர்வை வழங்கினார். அவ்வகுப்புவாரித் தீர்வின்படி:

1. முஸ்லீம்கள், இந்தியாவிலுள்ள ஐரோப்பியர், சீக்கியர்கள் ஆகியோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்;

2. தனித்தொகுதிகள் இடம்பெறாத பிற தகுதியுடைய வாக்காளர்கள் பொதுத் தொகுதியில் வாக்களிப்பர்;

3. பம்பாயில் பலவகை உறுப்பினர் தொகுதிகள் (Plural Member Constituencies) சிலவற்றில் மராத்தியர்களுக்கென ஏழு இடங்கள் ஒதுக்கப்படும்;

4. தாழ்த்தப்பட்டோருக்கான (Depressed Classes) தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்;

5. ஆங்கிலோ-இந்தியர்கள் தங்களது வகுப்புவாரியாகவே வாக்களிப்பர்.

6. வர்த்தகம், தொழில், தோட்டத்தொழில் ஆகியவற்றுக்குப் பிரத்யேகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு வழங்கிய வகுப்புத் தீர்வு இந்திய சமுதாயங்களுக்கிடையே புகுத்தப்பட்ட வெறுப்புத் தீர்வாகும்; அதாவது பரஸ்பர வெறுப்பையும் அவநம்பிக்கையையும் வளர்க்கக்கூடிய தீர்வாகும்; இத்தீர்வின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டு விடுவர். சமயம், வகுப்பு, இனம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் நாடு பிரிக்கப்பட்டால் இந்தியாவின் ஒருமைப்பாடும் பல வகுப்பாரிடையே நிலவ வேண்டிய ஒற்றுமையும் சீர்குலைந்துவிடும். தனிப்பிரதிநிதித்துவம் கோராத கிறித்துவர்களுக்கும் பெண்களுக்கும்கூட இட ஒதுக்கீடு செய்தது விஷமத் தனமானது. முஸ்லீம்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் தனித்தொகுதிகள் அளிக்கப்படுவதால் வங்காளத்தின் மண்ணின் மைந்தர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவர். இத்தகைய அச்சங்கள் இந்தியர்களிடையே எழுந்தன. வங்காளத்திலும் பஞ்சாபிலும் சிறுபான்மையினராக இருந்த இந்துக்களுக்கு இந்த வகுப்புத் தீர்வு மாபெரும் அநீதியை இழைத்துவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார் சி.ஒய்.சிந்தாமணி. இந்த வகுப்புத் தீர்வு நடைமுறைப் படுத்தப்படுமானால் சிறுபான்மையினருக்கும் பிறருக்குமிடையே பெரிய பிளவை ஏற்படுத்திவிடும் என்று அஞ்சப்பட்டது. சுருங்கக்கூறின், பிரதமர்

மக்டொனால்டின் வகுப்புத் தீர்வு நாட்டுப் பிரிவினையின் விதைகளைத் தன்கைத்தே தாங்கிக் கொண்டிருந்தது எனலாம்.

**பூனா உடன்பாடு**

மெக்டொனால்டின் வகுப்புத் தீர்வு இந்தியர்களை அதிர்ச்சிக்குள்ளாகியது. எரவாடா சிறையிலிருந்த காந்தி தனது உயிரைப் பணயம் வைத்தாவது வகுப்புத் தீர்வை எதிர்ப்பதென்று முடிவு செய்தார். காந்தி பிரிட்டிஷ் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு (1932 ஆக.18) வந்த பதிலில் தாழ்த்தப்பட்ட மக்களைபற்றி காந்தி எடுத்திருக்கும் முடிவு உள்நோக்கமுடையது என்று குறிப்பிடப்பட்டிருந்தது (செப். 12). இந்துக்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கும் நோக்கத்தோடு தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இது தவிர்க்கப்பட வேண்டிய திணிப்பு எனக் கருதிய காந்தி அதற்கெதிராகச் சாகும்வரை உண்ணாவிரதத்தை (Fast Unto Death )த் துவக்கினார் (செப்டம்பர் 20). காந்தியின் உண்ணாவிரதம் மில்லியன் கணக்கான இந்தியர்களின் உள்ளங்களையெல்லாம் உருக்கியது. மாளவியாவின் முயற்சியால் பிரதான இந்துத் தலைவர்கள் பூனாவில் கூடினர். மாளவியா, சாப்ரு, ராஜேந்திர பிரசாத், அம்ரித்லால் தக்கார், ராஜகோபாலாச்சாரி, பிர்லா, வல்லபாய் பட்டேல், சரோஜினி நாயுடு, குன்ஸ்ரு, அம்பேத்கார், எம்.சி.ராஜா போன்றோர் விரிவாக விவாதித்த பின்னர் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். அந்த உடன்பாடே பூனா உடன்பாடு( Poona Pact ) என்றழைக்கப்படுகிறது. காந்தி தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் ஆகியோருக்கு உடன்பாடான பூனா உடன்பாடு ஒரே சமயத்தில் லண்டனிலும், டெல்லியிலும் 1932 செப்டம்பர் 26ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. அன்று சரியாக மாலை 5.15 மணிக்கு காந்தி தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

**பூனா உடன்பாட்டின் படி,**

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனித்தொகுதிகள் இருக்காது;

2. பிற இந்துக்களைப் போலவே பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பர்;

3. பொதுத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கென குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்படும்;

4. ஒவ்வொரு ஒதுக்கப்பட்ட இடத்துக்கும் தாழ்த்தப்பட்டோர் நான்கு வேட்பாளர்களை தங்களுக்குள்ளிருந்து தேர்ந்தெடுப்பர்;

5. தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் வேட்பாளர் தேர்வு பற்றிய தொடக்கத் தேர்தல்கள் (Primary Election) ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கும்;

6.தாழ்த்தப்பட்டோருக்கு உள்ளாட்சி மன்றங்களிலும், பொதுப்பணிகளிலும் போதிய இடங்கள் அளிக்கப்படும்.

அப்போதையச் சூழ்நிலையில் பூனா உடன்பாடு பாராட்டத்தக்க சமரசச் சாசனமாகும். நாட்டு மக்களிடையே அது பரவலான வரவேற்பைப் பெற்றது. காந்தி மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக காந்தி எழுப்பிய குரலுக்கு இந்துக்கள் செவி சாய்த்தனர்.

தீண்டத்தகாதோர் என்று கருதப்பட்ட தாழ்த்தப்பட்டோர் இந்தியாவில் அரிஜன் (Harjians) கடவுளின் குழந்தைகள் என்று அழைக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான கோயில்கள் அவர்களுக்காகத் திறந்துவிடப்பட்டன: அவர்களது உயர்வுக்காகப் பாடுபடுவதற்கென அரிஜன சேவா சங்கம் (Harijan Sevak Sangh) தோற்றுவிக்கப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. அரிஜன் என்ற பெயரில் காந்தி ஒரு பத்திரிகையைத் துவக்கினார்.

எனினும் பூனா உடன்பாட்டில் காணப்பட்ட சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. உதாரணமாக, வகுப்புத் தீர்வின்படி தாழ்த்தப்பட்டோருக்கென 71 இடங்கள் தான் கிடைக்க வேண்டும். ஆனால் பூனா உடன்பாட்டின்படிஅவர்களுக்கு 148 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இவ்வுடன்பாட்டின் விளைவாகத் தனித் தொகுதிகளுக்கு முடிவுகட்டப்படவில்லை; மாறாக அவை ஏதோ ஒரு வடிவில் நிலைபெறவே செய்தன. இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு நேரடித் தொடர்பில்லாத வகுப்புப் பிரதிநிதித்துவத்துக்காக காந்தி சாகும்வரை உண்ணாவிரதமிருந்து போராட்டத்தைத் திசை திருப்பியிருக்க வேண்டாம் என்றும் சிலர் கருதினர். தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்துக்களின் அரசியல் சக்தி குறைந்துவிட்டது. எனவே நோயைவிட அதற்களிக்கப்பட்ட சிகிச்சை மோசமானது என்று கூறப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட சமனற்ற சமரசம் (Unequal Compromise) என்ற குற்றச்சாட்டுக்குள்ளாயிற்று. வங்காளத்திலும் பஞ்சாபிலும் பெரும்பான்மையினராக இருந்த இந்துக்கள் இந்த உடன்பாட்டால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இந்து சமுதாயம் முழுதுமே இவ்வுடன்பாட்டால் பாதிக்கப்பட்டது. காந்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இது பயன்பட்டதைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறியுள்ளார் டி.ஜி.டெண்டுல்கர் (D.G.Tendulkar).

**மூன்றாவது வட்டமேஜை மாநாடு, 1932**

இந்தியத் தலைவர்கள் வகுப்புவாதச் சிக்கலைத் தீர்ப்பதிலும் பலவீனப் பட்டுப்போன சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துவதிலும் ஈடுபட்டிருந்தபோது மூன்றாவது வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. அது 1932 நவம்பர் 17 லிருந்து டிசம்பர் 24 வரை நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு 46 தெரிந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் மட்டுமே பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் இதில் கலந்து கொள்ளவில்லை. இரண்டாவது வட்டமேஜை மாநாட்டின் போது அமைக்கப்பட்ட துணைக்குழுக்களின் அறிக்கைகள் பற்றியே விவாதம் நடைபெற்றது. குறிப்பாக பாதுகாப்பு விதிகள் கூட்டாட்சியில் மன்னர் மாநிலங்கள் இணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள், எஞ்சியுள்ள அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்தளிப்பது ஆகிய பிரச்னைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன. மூன்று வட்ட மேஜை மாநாடுகளும் வீண் முயற்சிகள் என கூற முடியாது. இந்தியக் கூட்டாட்சி, கூட்டாட்சிச் சட்டமன்றம், நீதிமன்றம், மன்னர் மாநிலங்கள் இணைவது போன்ற பல அரசியல் சட்டப் பிரச்னைகள் பற்றிய முடிவுகள்

எடுக்கப்பட்டன. இம்முடிவுகளையெல்லாம் உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை (White Paper) தயாரிக்கப்பட்டு 1933 மார்ச் மாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதுதான் 1935 இந்திய அரசாங்கச் சட்டமாகும்.

**போராட்டம் நிறுத்தப்பட்டது**

அரசாங்கத்தின் அடக்குமுறையையும் மீறிச் சட்டமறுப்பு இயக்கம் நீடித்தது. போராட்டம் மீண்டும் துவக்கப்பட்ட ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது (1933 ஜன.4) தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள். கைது செய்யப்பட்டார்கள். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் போலீஸ் தாக்குதலோடு கலைக்கப்பட்டது (மார்ச் 31). சிறைக்குள்ளிருந்த காந்தி சுயசுத்திக்கு 21 நாள் உண்ணாவிரதத்தை துவக்கினார் (மே 8). உண்ணாவிரதத்தைத் துவக்கிய அன்றே அவர் விடுவிக்கப்பட்டார். போராட்டத்தை மூன்று மாதங்களுக்குத் தள்ளி வைத்தார் காந்தி. காங்கிரஸ் தலைவர்கள் காந்தியை பூனாவில் சந்தித்துப் பேசினர் (ஜூலை 12). வைசிராயைச் சந்திக்க முடியாமையால் தனிமனித சத்தியாக்கிரகத்தை ( Individual Satyagraha )த் துவக்குவதென முடிவு செய்தனர். காந்தி மீண்டும் கைது செய்யப்பட்டதை (ஆக. 1)த் தொடர்ந்து 1933 ஆகஸ்டிலிருந்து 1934 மார்ச் வரை நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கானோர் தனிமனித சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுக் கைதாயினர். அவர்கள் அனைவரும் போலீஸ்சாரின் கொடூரமான தாக்குதல்களுக்கு உள்ளாயினர். தனிமனித சத்தியாக்கிரகமும் வலுவிழந்ததால் காங்கிரஸ் 1934 மே 20 ஆம் நாள் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டது. காந்தி காங்கிரசை விட்டுவிலகிக் கொள்ளத் தீர்மானித்தார். அகிம்சை, கதர், தீண்டாமை, நூற்பு, வாக்குரிமை, அரசியல் பிரச்னைகளுக்கு அறமுறைகளைப் பின்பற்றல் ஆகியவை பற்றிக் காந்திக்கும் பிற முக்கிய காங்கிரஸ் தலைவர்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் காங்கிரசைவிட்டு விலகிச் செல்ல முடிவு செய்தார். பம்பாயில் ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடிய காங்கிரஸ் காந்தியின் அந்த முடிவை ஏற்றுக்கொண்டது (1934 அக். 26-28). எனினும் காங்கிரஸ் காந்தியின் ஆலோசனைகளைக் கேட்டே செயல்பட்டது.

**மதிப்பீடு**

சட்டமறுப்பு இயக்கம் (1930-34) இறுதி வரைப் போராடுவதற்காகத் துவக்கப்பட்டது. ஆனால் இடையிலேயே நிறுத்தப்பட்டுவிட்டது. உப்புச் சத்தியாக்கிரகம் உண்மையான மக்கள் இயக்கமாக மலர்ந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு உவர்ப்புச் சத்தைக் கொடுத்தது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் நம்பிக்கையை வளர்த்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியமாக வில்லை. தற்காலிகமாக அரசாங்க அடக்குமுறை ஓய்ந்ததும், போராட்டம் நிறுத்தப்பட்டதும், காந்தி இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டதும் தான் அதன் சாதனைகளாயின. தனியே வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்ட காந்தியால் வகுப்புவாதப் பிரச்னைக்கும் தீர்வுகான முடியவில்லை. அரசியல் சட்டச் சலுகைகளையும் பெற இயலாமல் போயிற்று. இர்வினுக்குப்பின் வைசிராயாக வந்த விலிங்டன் பிரபு கட்டவிழ்த்துவிட்ட

அடக்குமுறையின் விளைவாகக் காந்தி மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்க வேண்டியதாயிற்று. மக்டொனால்டின் வகுப்புத்தீர்வு தேசிய ஒருமைப்பாட்டுக்கு வைக்கப்பட்ட வேட்டாயிற்று. பூனா உடன்பாடு தேசிய இயக்கத்தைத் திசை திருப்ப உதவிற்றேயொழிய வகுப்புவாதப் பிரச்னையைத் தீர்க்கவில்லை. மூன்று வட்டமேஜை மாநாடுகளின் தனிப்பெரும் சாதனை 1935 இந்திய அரசாங்கச் சட்டத்துக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்ததாகும். அதே சமயம் அம்மாநாடுகள் இந்திய வகுப்பு வாதச் சிக்கலுக்குத் தூபமிட்டதையும் மறப்பதற்கில்லை. நொண்டிக் கொண்டிருந்த சட்டமறுப்பு இயக்கத்தை தனிமனிதச் சத்தியாகிரகமும் காப்பாற்ற முடியாத நிலையில் காங்கிரஸ் போராட்டத்தை நிறுத்தியது. காந்தி காங்கிரசை விட்டு விலகினார். அதனால் சட்டமறுப்பு இயக்கத்தை விளைவேதுமற்ற தோல்வி எனக் கூறலாமா? எந்த இயக்கமும் போராட்டமும் வீண் முயற்சியல்ல, விளைவற்ற தோல்வியுமன்று, அவற்றின் வெளிப்படையான வெற்றியைவிட உள்முகத் தாக்கமே நீடித்தது நிலைக்கக் கூடியது. சட்டமறுப்பு இயக்கம் அடக்கப்பட்டது. ஆனால் மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வு அடங்கவில்லை. அடக்கப்படவுமில்லை. அடங்கி ஒடுக்கி வைக்கப்பட்ட போராட்ட உணர்வே 'வெள்ளையனே வெளியேறு' இயக்கமாக (Quit India Movement) விசுவரூபமெடுத்தது.